




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

ISSN: 2582–5518








வெள்ளி ❖ ஜனவரி. 12, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 99 ❖ ரூ.10


### மாலத்தீவில் வெளிநாட்டு தலையீட்டை உறுதியாக எதிர்க்கிறோம்: சீனா

# ஆதரவு

## மாலத்தீவின் சுற்றுலா வளர்ச்சிக்கு சீனா ஒத்துழைக்கும் என்பது உள்பட இரு நாடுகளுக்கு இடையே 20 ஒப்பந்தங்கள் கையெழுத்து

பெய்ஜிங் , ஜன. 12-

**மாலத்தீவில் வெளிநாட்டு தலையீட்டை உறுதியாக எதிர்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது. மேலும், மாலத்தீவின் சுற்றுலா வளர்ச்சிக்கு சீனா ஒத்துழைக்கும் என்பது உள்பட இரு நாடுகளுக்கு இடையே 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.**

பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகவும், இந்தியாவுக்கு எதிராகவும் மாலத்தீவு அமைச்சர்கள் 3 பேர் கருத்து தெரிவித்ததை அடுத்து, அந்நாட்டுக்கு சுற்றுலா செல்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்ற பிரச்சாரம் நமது நாட்டில் தீவிரமடைந்தது. இந்நிலையில், சீன ஆதரவாளராகக் கருதப்படும் மாலத்தீவு அதிபர் முகம்மது மொய்சு கடந்த 8-ம் தேதி சீனா சென்றார். சீன அதிபர் ஜி ஜின்பிங்கை புதன்கிழமை சந்தித்த மாலத்தீவு அதிபர், அந்நாட்டு பிரதமர் லீ கியாங்கை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதையடுத்து



வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், "இரு நாடுகளின் முக்கிய நலன்களை தொடர்ந்து உறுதியாக ஆதரிப்பது என இரு தரப்பும் ஒப்புக்கொள்கிறது.

தனது நாட்டின் இறையாண்மை, சுதந்திரம், தேசிய கவுரவம், மரியாதை ஆகியவற்றை மாலத்தீவு உறுதிப்படுத்திக் கொள்வதை சீனா உறுதியாக ஆதரிக்கிறது. மேலும், மாலத்தீவு தனது தேசத்தின் நிலைமைக்கு ஏற்ப தனக்கான வளர்ச்சிப் பாதையை ஆராய்வதை சீனா ஆதரிக்கிறது. அதோடு, மாலத்தீவின் உள் விவகாரங்களில் வெளிப்புற தலையீட்டை சீனா உறுதியாக எதிர்க்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டறிக்கையில்மாலத்தீவு தரப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது: "ஒரே சீனா கொள்கையை மாலத்தீவு உறுதியாக ஆதரிக்கிறது. தைவான் சீனாவின் பிரிக்க முடியாதபகுதி. சீனாவின் இறையாண்மையை குறைத்த மதிப்பிடும் எந்த ஒரு விஷயத்தையும் மாலத்தீவு எதிர்க்கிறது. சுதந்திர தைவான் என்பது பிரிவினைவாத நடவடிக்கை. தைவானுடன் அதிகாரபூர்வ உறவை மாலத்தீவு ஒருபோதும் கொள்ளாது. சீனாவின் உள் விவகாரங்களில் வெளிப்புற தலையீட்டை மாலத்தீவு எதிர்க்கிறது. தேசிய ஒருங்கிணைப்புக்காக சீனா எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் மாலத்தீவு ஆதரிக்கிறது" என்று மாலத்தீவு தெரிவித்துள்ளது.

மாலத்தீவின் சுற்றுலா வளர்ச்சிக்கு சீனா ஒத்துழைக்கும் என்பது உள்பட இரு நாடுகளுக்கு இடையே 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. மாலத்தீவுக்கு சுற்றுலா செல்லும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையில் ரஷ்யா முதலிடத்திலும், இரண்டு லட்சத்துக்கும் அதிகமான பயணிகளுடன் இந்தியா இரண்டாம் இடத்திலும், சீனா மூன்றாம் இடத்திலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மீதான சொத்து குவிப்பு வழக்கு ஒத்திவைப்பு

புதுக்கோட்டை:ஜன. 12-

புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

அ.தி.மு.க. முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் எம்.எல்.ஏ. வருமானத்திற்கு அதிகமாக ரூ.35 கோடியே 79 லட்சத்து 90 ஆயிரத்து 81 மதிப்பில் சொத்து சேர்த்ததாக புதுக்கோட்டை



லஞ்ச ஒழிப்புத்துறை போலீசில் கடந்த 2021-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ந்தேதி வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதில் அவரது மனைவி ரம்யாவின் பெயரும் இடம் பெற்றுள்ளது. இந்த வழக்கு தொடர்பாக விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா மீது மொத்தம் 210 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை புதுக்கோட்டை கோர்ட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் தாக்கல் செய்தனர். புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. ஆனால் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் வழக்கை மீண்டும் ஜனவரி 31-ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி பூரண ஜெய ஆனந்த் உத்தரவிட்டுள்ளார்.

## செந்தில் பாலாஜி தம்பி கட்டும் பிரம்மாண்ட பங்களாவில் வருமானவரித்துறை ரெய்டு

கரூர், ஜன. 12-

அமைச்சர் செந்தில் பாலாஜியின் தம்பி அசோக்குமார் புதிதாக கட்டி வரும் வீட்டில் வருமானவரித் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமைச்சரவையில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சராக இருந்தவர் செந்தில் பாலாஜி. இவர் கடந்த அதிமுக ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக பதவி வகித்தார். அப்போது போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதாகக்கூறி பண வசூல் செய்ததாக செந்தில் பாலாஜி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதில் சட்டவிரோத பணப்பரிமாற்றம்



நடந்ததாக கூறி அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது. இந்த விசாரணையின் முடிவில் ஜூன் மாதம் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். தற்போது அமைச்சர் செந்தில் பாலாஜி புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் கரூர் புறவழிச்சாலையில் செந்தில் பாலாஜியின் சகோதரர் அசோக்கின் மனைவி நிர்மலா பெயரில் பிரம்மாண்ட பேலஸ் கட்டப்பட்டு வருவதாக, சமீபத்தில் புகார் எழுந்தது.

இதன் எதிரொலியாக செந்தில் பாலாஜியின் தம்பி அசோக்குமார் மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களின் வீடு, அலுவலகங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். பின்னர் அசோக்குமார் வருமான வரித் துறை அலுவலகத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என நோட்டீஸ் ஒட்டிச்சென்றனர்.

இது தொடர்பாக இதுவரை அசோக்குமார் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்காமல் தலைமறைவாக உள்ளார். இந்நிலையில் கரூர் - நாமக்கல் புறவழிச்சாலையில் உள்ள ராம் நகரில் அசோக்குமார் கட்டி வரும் புதிய பங்களாவில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். அப்போது பொறியாளர்கள் மூலம் கட்டடத்தை மதிப்பீடு செய்ததோடு, இடத்தை அளவீடு செய்தனர். செந்தில் பாலாஜியை தொடர்ந்து அவரது தம்பியைக் குறிவைத்து சோதனை நடைபெற்று வருவது திமுகவினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சமத்துவ பொங்கல் கொண்டாடினார்.

### கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு

## ‘சட்டமன்ற நாயகர் கலைஞர்” மாணவர்கள் கருத்தரங்கம் அமைச்சர்கள் அரசு தலைமைக் கொறடா ஆகியோர் பங்கேற்பு

புதுக்கோட்டை, ஜன. 12-

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரி, சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை இராணியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞரர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ‘சட்டமன்ற நாயகர் - கலைஞர்” மாணவர்கள் கருத்தரங்க விழாவில், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன் ஆகியோர் பங்கேற்று, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.





புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற ‘சட்டமன்ற நாயகர் - கலைஞர்” கருத்தரங்க விழா, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை சிவபுரம் ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில், சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையிலும், சட்டமன்றத்தின் மூலமாக செயல்படுத்திய திட்டங்களை மாணவ, மாணவிகள் அறிந்துகொள்ளும் வகையிலும், ‘சட்டமன்ற நாயகர் - கலைஞர்” கருத்தரங்க விழா தமிழகம் முழுவதும் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சி மூலமாக சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் சாதுரியமான சட்டமன்ற உரைகள் குறித்தும், முதலமைச்சராக, எதிர்கட்சி தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய போது மற்ற உறுப்பினர்களின் கேள்விக்கு பதில் அளித்த விதம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே இன்றையகால மாணவ, மாணவிகள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞரால் சமுதாயத்திற்கு சட்டமன்றத்தின் மூலமாக ஆற்றியுள்ள செயல்பாடுகளை முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது; கலைஞரின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடிடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், மருத்துவ முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழக அரசால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்களில் ஒன்றான ‘சட்டமன்ற நாயகர்-கலைஞர்” என்ற குழு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவரின் தலைமையில், முன்னாள் பேரவைத் தலைவர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கல்லூரிகள் மற்றும் 1 பள்ளியில் நடைபெற்றது.

இதன் வாயிலாக இன்றையகால இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலைவாய்ப்புகள் கிடைத்து வருகின்றன. எனவே இன்றையகால இளைஞர்கள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினை தெரிந்து கொள்வதுடன், செயல்படுத்திய திட்டங்கள் மூலமாக தங்களது வாழ்க்கையினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் அரசு தலைமைக் கொறடா அவர;கள் தெரிவித்ததாவது; புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் கருத்தரங்க நிகழ்ச்சிகள் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் புதுக்கோட்டையை தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டத்தினை அமைத்து கொடுத்தார். இந்த புதிய மாவட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரகம் அமைக்க வேண்டி மன்னரிடம் கேட்டு 100 ஏக்கர் பரப்பளவில் இடத்தை பெற்று மாமன்னனாக விளங்கி வருகிறார்கள். என தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. வை.முத்துராஜா, சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, நகர்மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளர் இரவிசந்திரன், சட்டமன்றப் பேரவை இணைச் செயலாளர் ஸ்ரீவித்யா, மண்டலக் கல்லூரி கல்வி இணை இயக்குநர் குணசேகரன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா, கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளை செயலாளர் சுப்பிரமணியன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் சுகந்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அமீர் பாஷா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஸ்ரீதர், உதவி ஆணையர் (கலால்) மாரி, வட்டாட்சியர்கள் கவியரசன், புவியரசன், நகர்மன்ற உறுப்பினர்கள் சுப சரவணன், செந்தாமரை பாலு, மதியழகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

சென்னை : ஜன. 12,

தமிழ்நாட்டில் இன்று முதல் ஜனவரி 14ம் தேதி வரை பொங்கல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

தமிழர் திருநாளான தைப்பொங்கல் திருநாள் வருகிற 15-ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி இன்று முதல் 14-ம் தேதி வரை 3 நாட்களுக்கு சென்னை மற்றும் பிற ஊர்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

சென்னையிலிருந்து பல்வேறு ஊர்களுக்கும்



செல்ல கோயம்பேடு, தாம்பரம், மாதவரம் உள்ளிட்ட 6 இடங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுதவிர திருச்சி, தஞ்சாவூர், கரூர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களுக்கு செல்லும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொங்கல் விடுமுறைக்குப் பின் 16, 17, 18 ஆகிய தேதிகளிலும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு 4,706 சிறப்புப் பேருந்துகளும், பிற இடங்களில் இருந்து 8,478 சிறப்புப்பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. சிறப்புப் பேருந்துகள் குறித்து அறியவும், புகார் தெரிவிக்கவும் 94450 14450, 94450 14436 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று



12·1·24

சந்திர தரிசனம்

சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள்

திருக்கூடலூர் ஜகத்ரக்ஷக பெருமாள் : பிரிந்திருக்கும் தம்பதிகளை சேர்த்து வைக்கும் தலம்.

சக வருடம் 1945 பௌஷ் 22

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது மார்கழி 27 | JAN - FRI வெள்ளி | ஜமா அத்துல் ஆகிர் 29 வளர்பிறை 012/354 | இராசிபலன் |

வளர். பிரதமை 25.17 (மா. 04.40) உத்திராடம் 27.50 (மா. 05.41) திவாஜ 37.05 சித்த 27.50 மேல் மரண. இஷ்டி காலம். திருநள்ளாறு ஸ்ரீ முருகர் பெருமாள் கினியாகன சேவை. சந்திர தரிசனம். திருவோண விரதம். மதுரை ஸ்ரீசெல்வத்தம்மன் ரதோத்சவம்.

| | நல்லநேரம் | கௌரி நல். | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 12.30-1.30 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு
பரிகாரம் : வெல்லம்
சந்திராஷ்டமம் : மிருகசீரிஷம் திருவாதிரை

மேஷம் - போட்டி, ரிஷபம் - சிரமம், மிதுனம் - உற்சாகம், கடகம் - நஷ்டம், சிம்மம் - முயற்சி, கன்னி - செலவு, துலாம் - ஆக்கம், விருச்சி - இன்பம், தனுசு - பாசம், மகரம் - மதிப்பு, கும்பம் - லாபம், மீனம் - அமைதி

அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"நீங்கள் எங்கிருந்தாலும், எத்தகைய சூழ்நிலைக்கு வெளிப்படுத்தப்பட்டாலும், ஒவ்வொரு சூழ்நிலையிலிருந்தும் நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்ளுங்கள். வாழ்வனுபவம் வீண்போக விடாதீர்கள்."


புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதீ'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை - 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,830 | Rs. 6,300 |


## அரசியலில் இயங்கும் இளைஞர்கள் அடிக்கடி கட்சி மாறக் கூடாது – வெங்கைய்ய நாயுடு பேச்சு



புனே: ஜன. 12, அரசியலில் இருக்கும் இளைஞர்கள் அடிக்கடி கட்சி மாறக் கூடாது என்று முன்னாள் துணை குடியரசுத்தலைவர் வெங்கைய்ய நாயுடு கருத்துதெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிராவின் புனே நகரில் உள்ள எம்ஐடி அரசு பள்ளி மற்றும் எம்ஐடி உலக அமைதி பல்கலைக்கழகம் சார்பில் நடைபெற்றநிகழ்ச்சியில் பங்கேற்றுபேசிய வெங்கைய்ய நாயுடு, "மாணவர்களுக்கு எனது அறிவுரை, அரசியலில் சேருங்கள். ஆக்கபூர்வமாக செயல்படுங்கள், கவனமாக இருங்கள். அடிக்கடி கட்சி மாறாதீர்கள். யார் எந்த கட்சியில் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்வது தற்போது கடினமாக இருக்கிறது. நான் நாடுமுழுவதும்பயணிக்கிறேன். பல இடங்களில் பேசும்போது ஒருவரை குறிப்பிடும்போது அவரது கட்சியையும் குறிப்பிடுவேன். ஆனால், தற்போது அவர் அந்தக் கட்சியில் இல்லை என சொல்வார்கள். இது ஜனநாயகத்துக்கு அவமானகரமானது.

வளரும் அரசியல்வாதிகளுக்கு எனது அறிவுரை என்னவென்றால், கொள்கையோடு நெருக்கமாக இருங்கள். நீங்கள் இருக்கும் கட்சியில் உள்ள தலைவர் திமிர்பிடித்தவராக, சர்வாதிகாரியாக இருக்கிறாரா, அப்படியானால் அது குறித்து கட்சிக்குள் விவாதியுங்கள். விவாதித்து முடிவெடுங்கள். இதுதான் வழி. மாறாக, அந்தக் கட்சியை விட்டு வேறு கட்சிக்கு மாறுவது சகஜமானால், மக்களுக்கு அரசியல் மீது மரியாதை இருக்காது. மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கட்சியை அடிக்கடி மாற்றிக்கொண்டால், மக்களுக்கு அரசியல்மீதுஆர்வம்போய்விடும். இது ஜனநாயகத்துக்கு கேடு. அரசாங்கம்தவறிழைக்கும்போது எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்த வேண்டும்; தவறு நிகழாமல் தடுக்க வேண்டும். அவர்கள் தவறான நடவடிக்கைகளைத்தான் எதிர்க்கிறார்களே தவிர அரசாங்கத்தை அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ வேண்டும். அவர்கள் சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற செயல்பாடுகளை முடக்கக் கூடாது" என்று வெங்கைய்ய நாயுடு பேசினார்.

## தேர்ச்சி சதவீதம் குறைந்த உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு மீளாய்வுக்கூட்டம்



புதுக்கோட்டை, ஜன,12, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கடந்த 2023 மார்ச், ஏப்ரலில் நடைபெற்ற 10,12 – ம் வகுப்பு அரசுப்பொதுத் தேர்வில் தேர்ச்சி சதவீதம் குறைந்த பள்ளிகளின் தலைமை யாசிரியர்களுக்கான மீளாய்வுக்கூட்டம் புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலகத் தேர்வுக்கூட அரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் புதுக்கோட்டை மாவட்ட கண்காணிப்பு. அலுவலரும், இணை இயக்குநருமான (மேல்நிலைக்கல்வி) ச.கோபிதாஸ் தலைமையில் நேற்று ( வியாழக்கிழமை) நடைபெற்றது.

அப்போது கடந்த 2023 ஆம் ஆண்டு அரசுப்பொதுத் தேர்வில் தேர்ச்சி சதவீதம் குறைந்த ஒவ்வொரு பள்ளித்தலைமை யாசிரியரிடமும் தேர்ச்சிசதவீதம் குறைந்ததற்கான காரணத்தை பாடவாரியாக கேட்டறிந்து, இந்த கல்வியாண்டின் அரையாண்டுத்தேர்வில் ஒவ்வொருபள்ளியும்பெற்றுள்ள தேர்ச்சி சதவீதத்தினை பாடவாரியாக பகுப்பாய்வு செய்து இந்த ஆண்டு அரசுப்பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த மீளாய்வுக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா, மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) ரமேஷ், ராஜேஸ்வரி, தேர்வுத்துறை உதவி இயக்குநர் தமிழரசன், உதவித்திட்ட அலுவலர் சுதந்திரன், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் முருகையன், ராஜூ, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குரு.மாரிமுத்து, இளையராஜா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

அதனைத்தொடர்ந்து மாலையில் முதன்மைக்கல்வி அலுவலக தேர்வுக்கூட அரங்கில் வட்டாரக்கல்வி அலுவலர்கள்,வட்டாரவளமைய மேற்பார்வையாளர்களுக்கான மீளாய்வுக்கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலரான இணை இயக்குநர் ( மேல்நிலைக்கல்வி) கலந்துகொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்தார். அப்போது மாவட்டக்கல்வி அலுவலர்கள்( தொடக்கக்கல்வி) சண்முகம், செந்தில், உதவித்திட்ட அலுவலர்கள் கோவிந்தன், ஜெயந்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக 10-01-2024 (புதன்கிழமை) அன்று காலையில் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளித்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட அரசுப் பள்ளிகளில் நடைபெற்று வரும் தூய்மைப்பணிகளை கண்காணிப்பு அலுவலரான இணை இயக்குநர் ( மேல்நிலைக்கல்வி) ஆய்வு செய்துமாலையில் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு இணைய வழி கூட்டத்தின் வாயிலாக எங்கள் பள்ளி மிளிரும் பள்ளித்திட்டத்தின் கீழ் 8ந்தேதி முதல் 10ந்தேதிக்குள் முடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ள தூய்மைப்பணி செயல்பாடுகளை 100 சதவீதம் மேற்கொண்டு கல்வியியல் தகவல் மேலாண்மை முறைமையில் (எமிஸ்) பதிவேற்றம் செய்ய அறிவுரைகள் வழங்கினார்.


கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


மாநில முன்னுரிமையை வலியுறுத்தும் அரசாணை எண் 243 ஐ ரத்து செய்யக் கோரி

## இராஜபாளையத்தில் தொடக்க கல்வித்துறை ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் : 200 க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



இராஜபாளையம் : ஜன. 12, தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு டிட்டோஜாக் சார்பில் மாநில முன்னுரிமையை வலியுறுத்தும் அரசாணை எண் 243 ஐ ரத்து செய்யக்கோரி இராஜபாளையம் வட்டாரக் கல்வி அலுவலகம் முன்பு நேற்று தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இராஜபாளையம் ஒன்றிய டிட்டோஜாக் நிர்வாகிகள் கூறியதாவது: தொடக்கக் கல்வித் துறையில் பணிபுரியும் 90% ஆசிரியர்களின் பதவி உயர்வை வாய்ப்பை பறிக்கக் கூடிய மாநில முன்னுரிமையை வலியுறுத்தும் அரசாணை எண் 243 ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

கடந்த அக்டோபர் 12ஆம் தேதி பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோர் டிட்டோஜாக் உயர்மட்டக் குழுவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் வாய்மொழியாக ஏற்றுக் கொண்டு காணொளி மற்றும் அச்சு ஊடகங்களுக்கு தெரிவித்த எமிஸ் பதிவேற்றத்தில் இருந்து ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்க மூன்று நபர் குழுவின் மூலம் தீர்வு காண வேண்டும். உயர்கல்வி பயின்றவர்களுக்கு பின்னேற்பு அனுமதி வழங்க வேண்டும். பதவி உயர்வுக்கு பணி மூப்பு மட்டுமே போதும். தகுதித் தேர்வு தேவையில்லை என்ற மாநில அரசின் கொள்கை முடிவை நீதிமன்றம் மூலம் நிலைநாட்ட வேண்டும். இதில் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்தி விரைவில் தீர்வு காண வேண்டும். எண்ணும் எழுத்தும் ஆன்லைன் பதிவேற்றம் தேவை இல்லை. ஆசிரியர்களை கருத்தாளர்களாக அனுப்புவதை முற்றிலும் நிறுத்த வேண்டும் உள்ளிட்ட 12 கோரிக்கைகள் தொடர்பான எழுத்துப் பூர்வமான ஆணைகளை உடனடியாக வெளியிட வேண்டும்.

கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்றாவிட்டால் மாவட்டத் தலைநகரங்களில் ஜனவரி 27 ஆம் தேதி மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்றனர். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த 200– க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

## "நாட்டில் எதிர்க்கட்சியாக இருக்கக் கூட காங்கிரஸுக்கு தகுதி இல்லை" – ஜே.பி.நட்டா தாக்கு



புதுடெல்லி : ஜன. 12, காங்கிரஸ் 'பாரத் ஜோடோ நியாய யாத்திரை'யைத் தொடங்குவதற்கு வடகிழக்கை தேர்ந்தெடுத்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்றும் நாட்டில் எதிர்க்கட்சியாக இருக்கக் கூட காங்கிரஸுக்கு தகுதி இல்லை என்றும் பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் இருந்து மும்பை வரை 'பாரத் நியாய யாத்திரை' என்கிற பெயரில் காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி யாத்திரை நடத்தவுள்ளார். வருகிற ஜனவரி 14 முதல் மார்ச் 20 வரை இந்த யாத்திரை நடைபெறும் என சில தினங்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சி அறிவித்தது. வரும் 2024 மே மாதம் மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ராகுல் காந்தியின் பாரத ஜோடோ நியாய யாத்திரை தேசிய அரசியலில் மிகவும் கவனம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, பாஜகவும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா அசாமில் மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் வரவிருக்கும் மக்களவைத் தேர்தலுக்கான பாஜகவின் வியூகத்தை மதிப்பாய்வு செய்வார் என்றும் தொகுதிப் பங்கீடு குறித்தும் விவாதிப்பார் என்றும் கூறப்படுகிறது. இதையடுத்து குவஹாட்டியில் பாஜக மாநில செயற்குழு கூட்டத்தில் பேசிய ஜே.பி.நட்டா, "காங்கிரஸ் 'பாரத் ஜோடோ நியாய யாத்திரை'யைத் தொடங்குவதற்கு வடகிழக்கை தேர்ந்தெடுத்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு இது 'பாரத் டோடோ அநியாய யாத்திரை' போல் தெரிகிறது.

அநீதிக்கு அடித்தளமிட்டு இந்தியாவை உடைத்த காங்கிரஸ், இப்போது பாரத் ஜோடோ யாத்திரையை மேற்கொள்வது விந்தையானது. காங்கிரஸ் அரசாங்கத்தை நடத்துவதற்கு தகுதியற்றது. அதேவேளையில் எதிர்க்கட்சியாக இருக்கக்கூட தகுதியற்றது என நினைக்கிறேன். இந்தியா கூட்டணிக்கு இரண்டு இலக்குகள் உள்ளன. அதில் ஒன்று தங்களது சொத்துக்களையும், தங்களது கட்சி தலைவர்களின் குடும்பங்களையும் பாதுகாக்கவே இந்தியா கூட்டணியை அமைத்துள்ளனர். 2024 பொதுத் தேர்தலில் பாஜக மற்றொரு வெற்றியை உறுதிசெய்ய கடுமையாக உழைக்க வேண்டும்" என்றார்.

அகமதாபாத் - அயோத்தி இடையே விமான சேவை தொடக்கம்

## முதல் மூன்று வார விமானங்களுக்கான போர்டிங் பாஸ் பெற்றார் யோகி ஆதித்யநாத்




அயோத்தி : ஜன. 12, உத்தர பிரதேசத்தின் அயோத்தியில் பிரமாண்ட ராமர் கோவில் கட்டப்பட்டு அதற்கான கும்பாபிஷேக விழா வருகிற 22ம் தேதி நடைபெற உள்ளது.

ராமர் சிலை பிரதிஷ்டை நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் வருகிற ஜனவரி 15ம் தேதிக்குள் நிறைவடைந்துவிடும். அதன்பின் ஜனவரி 16ம் தேதி சிலை பிரதிஷ்டை பூஜை தொடங்கி, தொடர்ந்து 22ம் தேதி வரை நடைபெறும். இந்த நிகழ்ச்சியில் வெவ்வேறு பாரம்பரியங்களை சேர்ந்த 13 அகாராக்களின் 150 துறவிகள் மற்றும் சாமியார்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். இதுதவிர, 2,200 சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடப்பட்டு இருக்கிறது.

இந்நிலையில் ஆமதாபாத்தில் இருந்து அயோத்திக்கு முதல் விமானம் நேற்று புறப்பட்டு சென்றது. மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், மத்திய அமைச்சர் வி.கே. சிங் மற்றும் பிற மூத்த அதிகாரிகள் அகமதாபாத் மற்றும் அயோத்தி இடையேயான முதல் மூன்று வார விமானங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இதனையடுத்து மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா கூறுகையில், "டிசம்பர் 30ம் தேதி அயோத்தி மற்றும் டெல்லி இடையே இண்டிகோ மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் மூலம் இயக்கப்படும் முதல் விமானத்தை நாங்கள் தொடங்கி வைத்தோம்.

இன்று (ஜன. 11) அயோத்தியை ஆகமதாபாத்துடன் இணைத்துள்ளோம். 2014ல் உத்தரப் பிரதேசத்தில் 6 விமான நிலையங்கள் மட்டுமே இருந்தன, தற்போது அயோத்தி விமான நிலையம் உட்பட 10 விமான நிலையங்கள் உள்ளன. அடுத்த ஆண்டுக்குள் உ.பி.யில் மேலும் 5 விமான நிலையங்கள். அசம்கரில் தலா ஒரு விமான நிலையம் அமைக்கப்படும். அலிகார், மொராதாபாத், ஷ்ரவஸ்தி மற்றும் சித்ரகூட்டில் அடுத்த மாதம் திறக்கப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் ஜெவாரில் சர்வதேச அளவிலான விமான நிலையம் தயாராகிவிடும்" என்று அவர் கூறினார். இதனிடையே உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்திற்கு, அகமதாபாத் மற்றும் அயோத்தி இடையேயான முதல் மூன்று வார விமானங்களுக்கான போர்டிங்பாஸ் வழங்கப்பட்டது.

## பணகுடியில் பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி தமிழக சட்டப்பேரவை தலைவர் பங்கேற்பு



திருநெல்வேலி : ஜன. 12, திருநெல்வேலி மாவட்டம், பணகுடியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி, தமிழக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கார்த்திகேயன், திருநெல்வேலி எம்பி ஞான திரவியம், கூட்டுறவு சங்க இணை பதிவாளர் அழகிரி, ஆகியோர் முன்னிலையில் பணகுடி கூட்டுறவு பண்டக சாலையில் ரூ. 1000, 1 கிலோ பச்சரிசி,1 கிலோ சர்க்கரை, கரும்பு ஆகிய பொருட்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சட்டப்பேரவை தலைவர் அப்பாவு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திமுக நகர செயலாளர் தமிழ்வாணன், மதிமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கி சிறப்பித்தனர்.

## "ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதத்தை தூண்டுவதில் நம் எதிரிகளின் பங்கு உள்ளது" – ராணுவத் தளபதி



புதுடெல்லி : ஜன. 12, "ஜம்மு காஷ்மீரின் ரஜோரி, பூஞ்ச் மாவட்டங்களில் தீவிரவாத செயல்களைத் தூண்டிவிடுவதில் நம் எதிரிகளின் பங்களிப்பு உள்ளது" என்று இந்திய ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே தெரிவித்துள்ளார்.

ராணுவ தினத்தை முன்னிட்டு நடந்த வருடாந்திர செய்தியாளர்கள் சந்திப்பில் ராணுவத் தளபதி மனோஜ் பாண்டே பங்கேற்று செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளித்தார். அப்போது அவர், காஷ்மீரில் எல்லை தாண்டிய பயங்கரவாதம், இந்தியா - மியான்மர் எல்லைப் பாதுகாப்பு, சீன எல்லைப் பிரச்சினை எனப் பல்வேறு விவகாரங்கள் குறித்தும் பேசியுள்ளார். அவர் கூறியது: "ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச், ரஜோரி மாவட்டங்களில் கடந்த 2017, 18 வரை அமைதி இருந்தது. ஆனால், இப்போது தீவிரவாத செயல்களை இங்கு தூண்டிவிடுவதில் எதிரிகளின் பங்களிப்பு உள்ளது. கடந்த 5, 6 மாதங்களாகவே இப்பகுதிகளில் தீவிரவாதம் அதிகரித்துள்ளது. இது கவனிக்கத்தக்கது.

முன்பில்லாத அளவுக்கு காஷ்மீர் பள்ளத்தாக்கில் பரவலாக தற்போது இயல்பு திரும்பியுள்ளதால் எதிரிகள் அதைப் பொறுக்க முடியாமல் தீவிரவாதத்தைத் தூண்டி விடுகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 45 தீவிரவாதிகள் வீழ்த்தப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் 5 ஊடுருவல் முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன. அதில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். எல்லைத் தாண்டிய பயங்கரவாத பிரச்சினைகளுக்கு தீர்வு காண விதிகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்து வருகிறோம். ரஜோரி, பூஞ்ச், பீர் பாஞ்சல் பகுதிகளில் அமைதியைமீட்டெடுக்க9அம்ச திட்டத்தை வகுத்துள்ளோம். ராணுவமும், போலீஸும் கூடுதல் இணக்கத்துடன் செயல்பட்டால் நிச்சயமாக இங்கு தீவிரவாதச் செயல்களை முறியடிக்கலாம்.

மேலும், ராணுவத்தில் நவீன போர் தளவாடங்களை சேர்த்து வருகிறோம். மின்னணு உபகரணங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி போர்த் திறனை மேம்படுத்தியுள்ளோம். ட்ரோன் பயன்பாடு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆயுதப்படைக்கு கூடுதல் வலு சேர்க்கப்பட்டுள்ளது.

லடாக்கில் உள்ள வடக்கு எல்லையில் நிலைமை சீராக உள்ளது என்றாலும் முற்றிலும் பதற்றம் நீங்கிவிடவில்லை. (இந்தியாவின் வடக்கே சீனா, நேபாளம், பூடான் நாடுகள் உள்ளன) ராணுவ, தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுத்துதான் வருகிறோம். வடக்கு எல்லையில் எப்போதும் படைகளின் தயார்நிலை மிகை மிஞ்சியதாகவே உள்ளது. படைகள் குவிப்பும் அதிகம் என்றாலும், அது சீரானதாக இருப்பதை உறுதி செய்துகொள்கிறோம்.

இந்தியா - மியான்மர் எல்லையைப் பொறுத்தவரை அந்நாட்டு ராணுவ அதிகாரிகள் மற்றும் பூடான் மக்கள் சிலர் தஞ்சம் கோரும் நிகழ்வுகள் நடந்துள்ளன. எல்லையில் நிலவும் இனக்குழு மோதல்களைக் கூர்ந்து கவனித்து வருகிறோம். சில இனக் குழுக்கள் மணிப்பூருக்குள் ஊடுருவ முயல்வதை அறிந்து மணிப்பூர் எல்லையில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளோம். அசாம் ரைபிள்ஸ் படையின் 20 குழுக்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன. ஊடுருவல்களை முறியடிக்க மியான்மருடனான எல்லை வேலியை மேலும் பலப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்று மனோஜ் பாண்டே கூறினார்.

## அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஜன.22 வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம்



சென்னை : ஜன. 12– அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை 15-வது முறையாக நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஜன.22 வரை நீட்டித்து நீதிபதி எஸ். அல்லி உத்தரவிட்டார். சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 14ம் தேதி அமலாக்கத்துறையினரால் அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிராக கடந்த ஆகஸ்ட் மாதம் 3 ஆயிரம் பக்கம் கொண்ட குற்றப்பத்திரிகை மற்றும் அது தொடர்பான ஆவணங்களை அமலாக்கத்துறை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் தற்போது நீதிமன்ற காவலில் உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்தது. இதையடுத்து புழல் சிறையில் இருந்து காணொலி காட்சி மூலமாக செந்தில் பாலாஜி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி முன்பு ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஜனவரி 22ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டுள்ளார். இதன் மூலமாக செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 15வது முறையாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஜாமீன் கோரி அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனு மீது இன்று தீர்ப்பு வழங்கப்பட உள்ளது. ஜாமீன் மனுவில், நான் ஒரு அப்பாவி. சட்டத்தை மதித்து நடப்பவன். ஜாமீன் வழங்கினால் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்று நடப்பேன். சாட்சிகளை கலைக்க மாட்டேன். எனவே ஜாமீன் வழங்க வேண்டுமென உருக்கமாக கோரியுள்ளார். இந்த மனு மீது அமலாக்கத்துறை பதில் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது நினைவுகூரத்தக்கது.

# நிழல் முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் குற்றச்சாட்டு





சென்னை, ஜன,12

சென்னை ராஜாஜி சாலையில் உள்ள அலுவலகத்தில் அதிமுக அமைப்பு செயலாளர் ராயபுரம் ஆர்.மனோ ஏற்ப்பாட்டில் , மாவட்ட செயலாளர் பாலகங்கா தலைமையில் துறைமுகம் தொகுதிக்குட்பட்ட மக்கள் ஆயிரம் பேருக்கு வேட்டி, சேலை, அரிசி ,முந்திரி, வெல்லம், மற்றும் உதவி தொகை உள்ளிட்ட பொங்கல் பரிசுகளை முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் வழங்கினார்.

பொங்கல் தொகுப்பு பையை பெறுவதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசை நின்று பொங்கல் தொகுப்பை வாங்கி சென்றனர். பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய ஜெயக்குமார் திமுக ஆட்சியில் பொங்கலைக்கூட மகிழ்ச்சியாக கொண்டாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் ஆறாயிரம் ரூபாய் நிவாரணத் தொகை வாங்கிய மக்களுக்கு கூட ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு கிடைக்கவில்லை என குற்றம் சாட்டினார்.

வண்ணாரப் பேட்டை. ஜீ ஏ சாலையில் வியாபாரிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய 51 வது வார்டு மாமன்ற உறுப்பினரின் நிரஞ்சனா தற்காலிகமாக நீக்கி உள்ளதை விட நிரந்தரமாக நீக்கினால் மட்டும்தான் வியாபாரிகளுக்கு பாதுகாப்பு இருக்க முடியும் என தெரிவித்தார். அரசு மருத்துவமனைகளில் மருந்து கிடையாது உபகரணங்கள் இல்லை மருத்துவர்கள் இல்லாமல் உபகரணங்கள் இல்லாமல் மருத்துவமனைகளில் நிலைமை படு மோசமாக உள்ளது.

எல்லாத்துறை நிகழ்ச்சியிலும் உதயநிதி தான் கலந்து கொள்கிறார் அவர் நிழல் முதலமைச்சராக செயல்படுகிறார். ஆளும் கட்சி என்பதனால் அவரை துணை முதலமைச்சர் ஆகலாம் இல்லையென்றால் எழுதப்படாத சட்டம் இயற்றபட்டு முதலமைச்சராக கூட உதயநிதி ஸ்டாலின் பணியாற்றலாம் என தெரிவித்தார். மேலும் மீண்டும் கோர்ட் தீர்ப்பு வந்துள்ளதால் ஓபிஎஸ் மட்டுமல்ல அவரது அணியில் இருக்கிறவர்கள் சார்ந்தவர்கள் யாருமே அதிமுக கரைவேட்டி கட்டக்கூடாது என ஜெயக்குமார் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் அதிமுக கட்சியின் மாவட்ட நிர்வாகிகள்,பகுதி செயலாளர்கள்,வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதி ,மற்றும் துறைமுகம் பகுதி மகளிர் அணி தலைவி வேளாங்கன்னி வியாசர்பாடி பகுதி துணை செயலாளர், சந்தோஷ்மேரி, ராஜி,பகுதி பிரதிநிதி வள்ளி,உட்பட ஏராளமான அதிமுகவினர் கலந்து கொண்டனர்.



▶ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கோல போட்டியில் வெற்றி பெற்ற துறைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெ. குமாரவேல் பாண்டியன், பரிசுத்தொகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த. மாலதி, வருவாய் கோட்டாட்சியர் கவிதா மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகனிடம் புதுகை வரலாறு நாளிதழின் 2024 ஆம் ஆண்டு காலண்டரை மயிலாடுதுறை மாவட்ட நிருபர் யோகுதாஸ் வழங்கினார்.



▶ பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ் திரைப்பட சங்கத்தில் பொங்கல் பரிசு வழங்கப்பட்டது தலைவர் முரளி ராமநாராயணன் ,ராதாகிருஷ்ணன் ,கபார் , ஞானவேல் , திருமலை ,ஜோதி ஆகியோர் வழங்கிய பொங்கல் பரிசை நடுநிலை பார்வை ஆசிரியர் நடிகர் கே ஆர் சுரேஷ் பெற்றுக் கொண்டார்

## சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு செல்ல

# கோயம்பேடு, கிளாம்பாக்கம் உள்ளிட்ட 6 இடங்களில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கப்படும்







சென்னை,ஜன,12

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 3 நாட்களே உள்ளன. சென்னையில் பணி நிமித்தமாக தங்கி இருப்போர், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் பொங்கல் பண்டிகையை கொண்டாட தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். அவர்களின் வசதிக்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல் இந்த ஆண்டும் சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து பல இடங்களுக்கும் சிறப்பு பஸ்கள் நாளை (இன்று) முதல் 3 நாட்களுக்கு இயக்கப்படுகிறது. அதன்படி, சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கக்கூடிய 2,100 பஸ்களுடன் கூடுதலாக 4,706 சிறப்பு பஸ்கள் என 3 நாட்களுக்கு மொத்தம் 11,006 பஸ்களும், திருச்சி, கோவை உள்ளிட்ட பிற நகரங்களில் இருந்து 8,478 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன. இதன் மூலம், பொங்கல் பண்டிகைக்காக 3 நாட்களுக்கு சென்னை மற்றும் பிற நகரங்களில் இருந்து மொத்தம் 19,484 பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

மேலும், சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு செல்ல கோயம்பேடு, கிளாம்பாக்கம் உள்ளிட்ட 6 இடங்களில் இருந்து சிறப்பு பஸ்கள் விடப்படுகிறது. பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, செங்குன்றம் வழியாக ஆந்திர மாநிலம் செல்லும் பஸ்கள் மாதவரம் பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது. புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் செல்லும் பஸ்கள் கே.கே.நகரில் இருந்து இயக்கப்படுகிறது.

திண்டிவனம், விக்கிரவாண்டி வழியாக கும்பகோணம், தஞ்சாவூர் செல்லும் பஸ்கள் தாம்பரம் சானடோரியம் பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது. ஆற்காடு, ஆரணி, வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, திருத்தணி வழியாக திருப்பதி செல்லும் பஸ்கள் பூந்தமல்லி பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது.

விழுப்புரம், மதுரை, கும்பகோணம், சேலம், கோவை, நெல்லை கோட்டங்களை சேர்ந்த பஸ்கள் கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது. திருச்சி, தஞ்சை, கரூர், மதுரை, நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில் உள்ளிட்ட தென்மாவட்டங்களுக்கு செல்லும் அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்கள் கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படுகிறது. டிசம்பர் 12-ந்தேதிக்கு முன்பு திருச்சி தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்லும் அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்களில் முன்பதிவு செய்தவர்கள், கோயம்பேடுக்கு பதில் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து உரிய நேரத்தில் பயணம் செய்யலாம்.

இன்று முதல் 14-ந்தேதி வரை அரசு பஸ்களில் பயணம் மேற்கொள்வதற்கு முன்பதிவு செய்ய வசதிவாக கோயம்பேடு, கிளாம்பாக்கம், தாம்பரம் சானடோரியம் பஸ் நிலையங்களில் மொத்தம் 11 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், www.tnstc.in என்ற இணைதளம் வாயிலாகவும் முன்பதிவு செய்யலாம். மேலும், பஸ்கள் இயக்கப்படுவது குறித்த தகவலை பெறவும், புகார் அளிக்கவும் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை கோயம்பேட்டில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 9445014450, 9445014436 ஆகிய செல்போன் எண்களையும் தொடர்பு கொள்ளலாம். தனியார் ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலிப்பது தொடர்பாக 18004256151 என்ற இலவச எண்ணில் புகார் அளிக்கலாம். மேலும் பொங்கல் பண்டிகை முடிந்து பிற ஊர்களில் இருந்து சென்னைக்கு திரும்பி வர வருகிற 16-ந்தேதி முதல் 18-ந்தேதி வரை தினமும் இயக்கக்கூடிய 2,100 பஸ்களுடன், 4,830 சிறப்பு பஸ்களும், மற்ற நகரங்களுக்கு 6,459 சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகிறது



▶ முதலமைச்சர் உத்தரவின் பேரில், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு இராயபுரம் சட்டமன்ற தொகுதி 50வது வார்டு அர்த்தன் ரோடு பகுதியில் நியாய விலைக்கடையில் முதல்வரின் பொங்கல் பரிசு பொருட்கள் மற்றும் ரூ1000/-த்தை பொதுமக்களுக்கு இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்ட செயலாளர் கிருஷ்ணன் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் இருந்தனர்.

# சின்னப்பள்ளத்தூர் அரசு பள்ளியில் தூய்மை பணிகள் நடைபெற்றது



**சின்னப்பள்ளத்தூர், ஜன. 12-**

சின்னப்பள்ளத்தூர் அரசு பள்ளியில் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி என்று தூய்மை பணிகள் மூன்று நாட்கள் நடைபெற்றது. இத்திட்டத்தின்படி பள்ளி வளாகத் தூய்மை, வகுப்பறை தூய்மை, கழிப்பறை தூய்மை, குடிநீர்த் தொட்டி தூய்மை, பள்ளி வளாகத்தை பசுமையாக்க மரக்கன்றுகள் நட்டு பராமரிப்பது, காய்கறித் தோட்டம் அமைப்பது உள்ளிட்ட பணிகள் நடைபெற்றது.

இத்தூய்மை பணியில் ஊர் பொது மக்கள், 100 நாள் வேலை திட்ட பணியாளர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி என்பது பற்றி பொதுமக்களிடமும், மாணவர்களிடமும் தலைமை ஆசிரியர் மா. பழனி விளக்கி பேசினார்.சுத்தமான வாழ்வே சுகத்திற்கு ஆதாரம் என்பதை அனைவரும்உணர்ந்துநம்மையும் நாம்சார்ந்தஇடத்தையும்சுற்றுப்புற சூழலையும் சுகாதாரமாக வைத்துக் கொள்வது அவசியம் என்று கூறினார்.



▶ புதுச்சேரி குடிசை மாற்று வாரியம் காரைக்கால் மாவட்டத்தில் நேற்று காரைக்கால்-தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் தலைமையில் புதுச்சேரி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரியின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் காரைக்கால்-தெற்கு தொகுதியைச் சேர்ந்த 30 பயனாளிகளுக்கு பணி ஆணையை வழங்கினார்கள். இந்நிகழ்வில் புதுச்சேரி குடிசை மாற்று வாரிய ஓவர்சீர் இளங்கோ, வாரிய ஊழியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முதல் தவணையான ரூ.1,20,000/- வீதம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

# இந்த மாதத்தில் மூன்று நாட்களுக்கு டாஸ்மாக் கடைகளுக்கு விடுமுறை புதுக்கோட்டை கலெக்டர் தகவல்

**புதுக்கோட்டை, ஜன. 12-**

*நடப்பு மாதம் 2024 ஜனவரியில் அடுத்தடுத்து நிகழ இருக்கும் முக்கிய நிகழ்வு காரணமாக மூன்று நாட்களுக்கு டாஸ்மாக் கடைகள் இயங்காது என்று புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் மெர்சி ரம்யா தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது;; தமிழ்நாடு மதுபானம் [உரிமை மற்றும் அனுமதி[ விதிகள் 1981-ன் படி ஜனவரி 16ஆம் தேதி செவ்வாய்கிழமை திருவள்ளூர் தினம், ஜனவரி 25ஆம் தேதி வியாழக்கிழமை வடலூர் ராமலிங்கர் நினைவு நாள், மற்றும் ஜனவரி 26 ஆம் தேதி வெள்ளிக்கிழமை இந்திய குடியரசு தினம் ஆகிய நாட்களை உலர் நாளாககடைபிடிப்பதால் அன்றைய தினங்களில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபான கடைகள் மதுபானகூடங்கள் FL1/FL2/FL3/FL3A/FL3AA மற்றும் FL11 கடைகள் மற்றும் பார்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் என்பதால் அந்த நாளில் எந்தவிதமான மதுபானங்களும் விற்பனைசெய்யப்படாது என்று தமிழக அரசின் அறிக்கையை மேற்கோள் காட்டி தெரிவித்துள்ளார்.*



▶ காரைக்கால்-வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.என்.திருமுருகன் தலைமையில் புதுச்சேரி குடிசை மாற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரியின் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் காரைக்கால்-வடக்கு தொகுதியைச் சேர்ந்த 16 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணையை வழங்கினார்கள். இந்நிகழ்வில் புதுச்சேரி குடிசை மாற்று வாரிய ஊழியர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். முதல் தவணையான ரூ.1,20,000/- வீதம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

# நாகுடி கடைமடை பகுதிகளில் கருகும் பயிர்களுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்



*அறந்தாங்கி, ஜன. 12-*

*புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியை அடுத்த நாகுடி கல்லணை கால்வாய் பகுதிகளில் காவிரி நீரை நம்பி 27 ஆயிரம் ஏக்கருக்கு மேலாக விவசாயம் செய்து வருகின்றனர்.*

*இதில் கடந்த ஜுன் 12ஆம் தேதி மேட்டூரில் திறக்கப்பட்ட தண்ணீர் சில நாட்களில் நாகுடி கடைமடை பகுதிக்கு வந்தடைந்தது. அப்பகுதி விவாசயிகள்மகிழ்ச்சியுடன் காவிரி தண்ணீரை நம்பி விவசாயத்தில் ஈடுபட்டனர். தற்போது மேட்டூரில் இருந்து தண்ணீர் நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் தற்பொழுது கல்லணை கால்வாய் இருந்து உபரி நீர் வெளியாகி தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது.*

*ஆனால் இந்த உபரி நீர் சரிவர அனைத்து பகுதிகளுக்கும் செல்லாமல் இருப்பதால் தற்போது நெற்பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கருகும் பயிர்களை காப்பாற்ற தமிழக அரசு உடனடியாக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்க வலியுறுத்தி நாகுடி கல்லணை கால்வாய் பாசனதாரர் விவசாயிகள் ஒருங்கிணைப்பு சங்கத் தலைவர் கொக்குமடை ரமேஷ் தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பகுதி விவசாயிகள் ஏராளமான கலந்து கொண்டனர்.*

# ஓ.பன்னீர்செல்வத்தின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி – சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு



சென்னை : ஜன. 12, அதிமுக பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த தடை விதித்த தனி நீதிபதியின் இடைக்கால உத்தரவு செல்லும் என்றும், ஓபிஎஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்தும் சென்னை உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அதிமுகவில் எடப்பாடி பழனிச்சாமி ஒருங்கிணைப்பாளராகவும், ஓ.பன்னீர்செல்வம் இணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டு வந்தனர்.

இந்நிலையில் அதிமுகவின் தலைமைப் பதவியை பிடிக்க இருவருக்கு இடையே மறைமுகமாக போட்டி நிலவி வந்ததால் இருதரப்பினரும் தனித்தனி அணிகளாக செயல்பட தொடங்கினர். அதிமுகவின் முன்னணி தலைவர்கள் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவு அளித்ததால் ஒற்றைத்தலைமை என்கிற கோஷத்தை முன்னிறுத்தி, ஓ.பன்னீர்செல்வம் ஓரங்கட்டப்பட்டார்.

இதன் பின்னர் அதிமுகவில் நிலவிய பல்வேறு குழப்பம் மற்றும் பிரச்சினைகளுக்கு மத்தியில் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர். இந்நிலையில் கட்சியின் பெயர், சின்னம், கொடி, லெட்டர் பேட் ஆகியவற்றை ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் அதற்கு தடை விதிக்க வேண்டும் எனக் கோரி கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் அதிமுக கட்சியின் பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்துக்கு இடைக்காலத் தடை விதித்த வழக்கு குறித்து நவம்பர் 30 ஆம் தேதிக்குள் ஓ.பன்னீர்செல்வம் பதில் அளிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து ஓபிஎஸ் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. வழக்கு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், முகமது ஷஃபிக் அமர்வில் இரு தரப்பு வாதம் நிறைவுற்ற நிலையில் நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அதில் அதிமுக பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த தடை விதித்த தனி நீதிபதியின் இடைக்கால உத்தரவு செல்லும் என்றும், ஓபிஎஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்தும் சென்னை உயர்நீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்துள்ளது.



▶ கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே கொத்தங்குடி ஊராட்சியில் தமிழக அரசு முதல்வர் ஆணைக்கிணங்க வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் வழி காட்டுதல் பெயரில் கொத்தங்குடி ஊராட்சியில் தமிழர்களின் திருநாளான பொங்கல் பண்டிகையின் தொகுப்பினை ஊராட்சி மன்ற தலைவர் குணா பாலன் வழங்கினர் நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் நியாய விலை கடை பணியாளர் மற்றும் கிராம பொதுமக்கள் ஊராட்சி செயலாளர் அனைவரும் கலந்து கொண்டனர்

# தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சங்கரன்கோவிலில் திருப்பூர் குமரன் நினைவு தினம்



*சங்கரன்கோவில் : ஜன. 12, தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சுதந்திர போராட்டத்திற்காக கொடி காத்து உயிர் நீத்த திருப்பூர் குமரனின் 92- வது நினைவு நாள் நிகழ்ச்சி வடக்கு மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடந்தது.*

*இதில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருப்பூர் குமரன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு, பிஎல்ஏ வாசுதேவநல்லூர் தொகுதி பொறுப்பாளர் நல்லசேதுபதி, நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அன்சாரி, வார்டு செயலாளர் பாட்டத்தூர் ராமலிங்கம், ஜான், வக்கீல் செந்தில், ஜெயகுமார், கணேஷ், கார்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

# திருச்சி பல்கலைக்கழக அளவில் ஆணழகன் போட்டியில் எம்.ஆர்.கல்லூரி மாணவர் வெற்றி

அரியலூர்: ஜன. 12, திருச்சி பல்கலைக்கழக அளவிலான ஆணழகன் போட்டியில் தத்தனூர் எம்.ஆர்.கல்லூரி மாணவர் வெற்றி பெற்றார். இது பற்றி கல்லூரி நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பு:

பாரதிதாசன் பல்கலைக்கழக அளவிலான ஆணழகன் போட்டி, திருச்சி பிஷப் ஹிபர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல்



கல்லூரி முதலாம் ஆண்டு காட்சி தொடர்பியல் துறை மாணவர் தினேஷ் என்பவர், ஆணழகன் போட்டியில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்றுள்ளார்.

வெற்றிபெற்றமாணவருக்கு மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஆர். இரகுநாதன் ரூ. 1000 ஊக்கத்தொகை வழங்குவதாக கூறிபாராட்டினார். இயக்குநர்கள் முனைவர் ஆர்.இராஜமாணிக்கம், முனைவர். வைதியாகராசன், எம்.ஆர்.சி.உடற்கல்வித் துறைத்தலைவர் திருமுருகன் மற்றும் காட்சி தொடர்பியல் துறை தலைவர் சிலம்பரசன் ஆகியோர் வாழ்த்துக்களை கூறி பாராட்டினர்.



சென்னை தண்டையார்பேட்டை மண்டலம் .4. வட்டம் 42.ல் 2024 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற பாராளுமன்ற தேர்தல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்திய தேர்தல் ஆணையத்தின் வேண்டுகோளுக்கிணங்க 4.வது மண்டல அலுவலகத்தில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு .கணேசன், தலைமையில் 15 சுய உதவி சுய உதவி குழு உறுப்பினர்கள் சேர்ந்து பங்குபெற்று கோலமிட்டு தேர்தல் ஆணைய பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர் இதில் அழகாக கோலமிட்ட மூன்று நபர்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, என்று தேர்ந்தெடுக்கப்பட்டு கோலமிட்ட அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் ஆறுதல் பரிசினை மண்டல குழு தலைவர் நேதாஜி யு .கணேசன் எம். சி மண்டல அலுவலர் விசுவநாதன் உடன் 42வது மாமன்ற உறுப்பினர் எஸ். ரேணுகா,சுய உதவி குழுவின் பொறுப்பாளர் டயானா ,சீலா மற்றும் சுய உதவி குழு நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவி ஆய்வு

சேலம் : ஜன. 12, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்திற்கு ஆளுநர் ரவி வருகை தருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர் அமைப்பினர், அரசியல் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடந்த முறைகேடு புகாரில் துணைவேந்தர் ஜெகநாதன் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த பரபரப்பான சூழ்நிலையில், திடீர் பயணமாக நேற்று சேலம் வந்தடைந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்திற்கு வந்தார். அவருக்கு துணைவேந்தர் ஜெகநாதன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். பின்னர் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் மற்றும் பேராசிரியர்களுடன் ஆளுநர் ரவி கலந்துரையாடினார். பின்னர் ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

முன்னதாக ஆளுநர் ரவி,. சேலம் பெரியார் பல்கலைக்கழகத்திற்கு வருகை தருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர் அமைப்பினர், திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள், திராவிட கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் கருப்புக்கொடி காட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் கைது செய்தனர்



மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நடைபெறவிருக்கும் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி நேற்று ஆய்வு செய்து பார்வையிட்டார். அருகில் மாவட்ட கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், சோழவந்தான் எம் எல் ஏ வெங்கடேசன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# பழைய ஓய்வூதிய திட்டத்தை நிறைவேற்றாவிட்டால் பிப். 16–ல் வேலைநிறுத்தம் : எஸ்ஆர்எம்யு அறிவிப்பு

திருச்சி : ஜன. 12, பழைய ஓய்வூதிய திட்டத்தை மத்திய அரசு ஏற்கவிட்டால் வரும் பிப்ரவரி 16-ம் தேதி மத்திய தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து நாடு தழுவிய ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படும் என எஸ்ஆர்எம்யு தென் மண்டல தலைவர் ராஜா ஸ்ரீதர் தெரிவித்துள்ளார்.




பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும், புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும், காலி பணியிடங்களை நிரப்பிட வேண்டும், தனியார் மயமாக்கலை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் அலுவலகம் முன்பு எஸ்ஆர்எம்யு சார்பில் நேற்று 4 -வது நாளாக தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தினை எஸ்ஆர்எம்யு தென் மண்டல தலைவர் ராஜா சேகர் வாழ்த்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், "இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மத்திய அரசு செவி சாய்க்காது என்றாலும் அடுத்த கட்ட போராட்டத்துக்கான முன்னோட்டம் என்பதை உணர்த்தவே இந்த போராட்டம் நடைபெற்று வருகிறது. பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். தனியார் மயமாக்கலை கைவிட வேண்டும். குறைந்த ஓய்வூதியத்தை அதிகப்படுத்தி வழங்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம். நாடு முழுவதும் இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி 30 லட்சம் தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கோரிக்கைகள் நிறைவேற்றப் படாவிட்டால் வரும் பிப்ரவரி 16-ம் தேதி மத்திய தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும்" என்றார்.



தென்காசி மாவட்டம், கடையம் ஒன்றியத்திற்குட்பட்ட கோவிந்தபேரி ஊராட்சி மன்றத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரபடி பொங்கல் தொகுப்பு ரூ. 1000, 1கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, ஒரு கரும்பு, ஆகிய பொருள்களை ஊராட்சி மன்ற தலைவர் டி.கே.பாண்டியன் தலைமையில் பொங்கல் தொகுப்பு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் இளவரசி ராஜா, துரை சிங்கக்குட்டி, மாரித்துரை, சிவா, பேரைச்சாமி, கோமபாண்டி மற்றும் திமுக ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்துகொண்டு பொங்கல் தொகுப்பு பரிசு வழங்கி சிறப்பித்தனர்.

# ஆதனக்கோட்டை வீர ஆஞ்சநேயர் ஆலயத்தில் அனுமன் ஜெயந்தி விழா கோலாகலம்

ஆதனக்கோட்டை, ஜன.12–

ஆதனக்கோட்டை மின்வாரிய அலுவலக வளாகத்தில் உள்ள வீர ஆஞ்சநேயர் ஆலயத்தில் மார்கழி அமாவாசையையொட்டி அனுமன் ஜெயந்தி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அனுமன் ஜெயந்தி விழாவில் வீர ஆஞ்சநேயருக்கு சந்தனம், பால், தயிர், இளநீர், அரிசி மாவு, திரவிய பொடி, பன்னீர்



உள்ளிட்ட 9 வகையான அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் ஆஞ்சநேயருக்கு சந்தன காப்பு அலங்காரம் செய்து வெற்றிலைமாலை, துளசி மாலை, வாழைப்பழமாலை அனிவிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. ஆதனக்கோட்டை சுற்றுவட்டார பகுதி கிராமங்களை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பின்னர் பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா விமரிசையாக நடைபெற்றது

புதுக்கோட்டை : ஜன. 12, புதுக்கோட்டை, தெற்கு 4-ஆம் வீதியில் பெரிய மார்க்கெட் பகுதியிலுள்ள உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் அனுமன் திருச்சபையினர் சார்பில் அனுமன் ஜெயந்தி விழா விமரிசையாக கொண்டாடப்பட்டது.



காலையில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் பல்வேறு வீதி வழியாக ஊர்வலமாக பால்குடம் எடுத்து வந்தனர். பின்னர் கோயிலில் ஆஞ்சநேயருக்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம், வெள்ளிக்கவசம் வடை மாலை அலங்காரத்தில் மஹா தீபாரதனை நடந்தது. ஸ்ரீ ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்

கோயிலில் உற்சவர் ராமர் சீதா லெட்சுமணர், உற்சவர் ஆஞ்சநேயர், வராகி அம்மன் நரசிம்மர், ஹயக்கிரிவர்க்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாரதனை நடைபெற்றது. பின்னர் உற்சவர் ஆஞ்சநேயர் அலங்காரத்தில் பல்வேறு வீதி வழியாக பவனி வந்தார். இதில் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று ஆஞ்சநேயரை வழிபட்டனர். அனைவருக்கும் அருட் பிரசாதம் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை அனுமன் திருச்சபை ஆன்மிக நெறியாளர் ஆனந்த் சுப்பிரமணிக்குருக்கள் ஸ்ரீனிவாசன் மற்றும் கோயில் நிர்வாகிகள் சிறப்புடன் செய்தனர்.

# தமிழக சட்டப்பேரவை தலைவர் பணகுடியில் பொங்கல் தொகுப்பு வழங்கி சிறப்பித்தார்

திருநெல்வேலி, ஜன. 12–

திருநெல்வேலி மாவட்டம், பணகுடியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, தமிழக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கார்த்திகேயன், திருநெல்வேலி எம்பி ஞான திரவியம், கூட்டுறவு சங்க இணை பதிவாளர் அழகிரி, ஆகியோர் முன்னிலையில் பணகுடி கூட்டுறவு பண்டக சாலையில் ரூ. 1000, 1 கிலோ பச்சரிசி,1 கிலோ சர்க்கரை, கரும்பு ஆகிய பொருட்களை



பொதுமக்களின் பயன்பாட்டிற்கு சட்டப்பேரவை தலைவர் அப்பாவு தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திமுக நகர செயலாளர் தமிழ்வாணன், மதிமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கி சிறப்பித்தனர்.

# சிவகிரியில் பொங்கல் தொகுப்பு வழங்கி சிறப்பித்தனர்

சிவகிரி : ஜன. 12, தென்காசி மாவட்டம், சிவகிரியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆணைப்படி அரசின் சார்பில் வழங்கப்படும் பொங்கல் தொகுப்பு ரூ. 1000, 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, கரும்பு ஆகிய பொருட்கள் பொதுமக்களுக்கு மாநில மருத்துவ அணி துணை செயலாளர் மருத்துவர் சு.செ. செண்பக விநாயகம் தலைமையில், சிவகிரி பேரூராட்சி தலைவி கோமதி சங்கரி சுந்தரவடிவேலு, பேரூராட்சி மன்ற துணை தலைவர் லட்சுமி ராமன்



முன்னிலையில் பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் அணி தலைவர் மருதப்பன், சார்பு அணிகள் நிர்வாகிகள் வீரமணி, கார்த்திக், முத்துலட்சுமி, தங்கராஜ், புல்லட் கணேசன், ஒன்றிய பிரதிநிதி இராமச்சந்திரன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், திமுக முன்னோடிகள் கலந்து கொண்டு பொங்கல் தொகுப்பு வழங்கி சிறப்பித்தார்கள்.

# யாருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறதோ, அவர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படும் – எடப்பாடி பழனிசாமி

சேலம் : ஜன. 12, "யார், யாருக்கெல்லாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்பம் இருக்கிறதோ, அவர்கள் எல்லாம் முறையான தலைமைக் கழக அறிவிப்புக்குப் பின்னர், அங்கு வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.அதன்பின்னர், மூத்த தலைமைக் கழக நிர்வாகிகள், கலந்தாலோசித்து யாருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறதோ, அவர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படும்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், அதிமுகவில் முதற்கட்டமாக 20 வேட்பாளர்களை அறிவித்து மறைமுகமாக களப்பணியாற்ற உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறதே என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்கு நாங்கள் பொறுப்பாளி அல்ல. வேட்பாளர்தேர்வுஎதுவும் நடைபெறவில்லை.

யார்,யாருக்கெல்லாம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட விருப்பம் இருக்கிறதோ, அவர்கள் எல்லாம் முறையான தலைமைக் கழக அறிவிப்புக்குப் பின்னர், அங்கு வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். அதன்பின்னர், மூத்த தலைமைக்கழக நிர்வாகிகள், கலந்தாலோசித்து யாருக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறதோ, அவர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்படும்"என்றார்.

அப்போது வெள்ள பாதிப்புகளை திமுக கையாண்ட விதம் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "இந்த அரசாங்கம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அவ்வப்போது, ஊடகங்களும் பத்திரிகைகளும் காட்டி வருகின்றன. மிக்ஜாம் புயல் சென்னையில் பாதிப்புகளை ஏற்படுத்தியது. அந்த புயலின் போது,



அதிகமான காற்றும் இல்லை. அதிகமான மரங்களோ, மின்கம்பங்களோ சாயந்துபோகவும் இல்லை. கனமழையால் தண்ணீர் தேங்கியதால், ஆங்காங்கே மக்கள் பாதிப்புக்குஉள்ளாகினர்.

திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு, பொறுப்பற்ற முறையில் முதல்வரும், அமைச்சர்களும் பத்திரிகை மற்றும் ஊடகங்களின் வழியே பேட்டி கொடுத்தனர். சென்னை மாநகரத்தில் எவ்வளவு மழை பெய்தாலும், ஒரு சொட்டு தண்ணீர் கூட தேங்காத வகையில் வடிகால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற தவறான, பொய்யான செய்திகளை வெளியிட்டனர்.மக்களும் அதனை நம்பிவிட்டனர்.

அந்த செய்தியை மக்கள் நம்பியதால், கனமழையால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஏற்கெனவே, சென்னை மாநகரத்தில், வடிகால் பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டு விட்டதாக நகராட்சி நிர்வாகத்துறைஅமைச்சர், மற்றஅமைச்சர்கள்மற்றும் முதல்வரும்கூறினார்கள். ஆனால், கனமழையால் தண்ணீர் தேங்கியதால், பொதுமக்கள் பாதிக்கப்பட்டதுடன், அவர்களது வீடுகளில் இருந்த பொருட்கள் அனைத்தும் கடுமையாக சேதமடைந்துவிட்டன.

2-3 நாட்களுக்கு மக்களுக்கு உணவுகூட கிடைக்காத நிலையை தொலைக்காட்சியில் பார்த்தேன். உண்மைநிலை இவ்வாறு இருக்க, இந்த திமுக அரசு பொய்யான ஒரு செய்தியை வெளியிட்டு மக்களை ஏமாற்றி வருகிறது. மிக்ஜாம் புயலின் காரணமாக, டிசம்பர் 3 மற்றும் 4-ம் தேதிகளில் மழை பெய்தது. அதை ஒரு பாடமாக அரசு எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

தென் மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெளிவாக கூறியிருக்கிறது. நெல்லை, குமரி, தூத்துக்குடி, மற்றும் தென்காசியில் அதிகனமழை பெய்யும் என்று ஒரு வாரத்துக்கு முன்பாகவேசெய்திகளும் வெளிவந்துள்ளன. திறமையற்ற முதல்வர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைஎடுக்காததால், அம்மாவட்ட மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை அரசு மேற்கொண்டிருந்தால், இந்த அரசாங்கம் மக்களின் கோபத்துக்கு ஆளாகியிருக்க மாட்டார்கள்" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

# ராமர் கோயில் திறப்பு விழாவை கூண்டோடு புறக்கணிக்கும் எதிர்க்கட்சிகள் : சமாஜ்வாதி கட்சியும் நிராகரிப்பு

டெல்லி : ஜன. 12, காங்கிரசை தொடர்ந்து சமாஜ்வாதி கட்சியும் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிக்க முடிவு செய்துள்ளது.

அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோயில் திறப்பு விழா, ஜனவரி 22ம் தேதி நடைபெறுகிறது. இதில் பங்கேற்க சமாஜ்வாதி தலைவரும், உத்திரப்பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. விஸ்வ ஹிந்து பரிஷத் செயல் தலைவர் அலோக்குமார் விடுத்த இந்த அழைப்பை அகிலேஷ் யாதவ் நிராகரித்துள்ளார். ஏற்கனவே ராமர்



கோயில் திறப்புக்கான அழைப்பை காங்கிரஸ் மூத்ததலைவர் சோனியா காந்தி, தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஆகியோர் நிராகரித்துவிட்டனர்.

ராமர் கோயில் விவகாரத்தில் பாஜகவின் நடவடிக்கைகளை விமர்சித்த சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, ராமர் பாஜகவுக்கு மட்டும் சொந்தமானவர் இல்லை என்றார். ஆம் ஆத்மி, தேசியவாத காங்கிரஸ் கட்சிகள், தங்களுக்கு ராமர் கோயில் திறப்பு விழாவுக்கான அழைப்பிதழே வரவில்லை என்று கூறியிருந்தன. காங்கிரஸ், மார்க்சிஸ்ட், சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் என எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து ராமர் கோயில் திறப்பு விழாவை புறக்கணிக்க முடிவு செய்து பாஜகவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் கட்டி முடிக்கப்படாத ராமர் கோயிலை தேர்தல் லாபத்திற்காக முன் கூட்டியே திறப்பதாக கூறி பல சங்கராச்சாரியார்களும் ராமர் கோயில் திறப்பு விழா அழைப்பிதழை நிராகரித்துள்ளனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# துப்பாக்கி சுடுதலில் தங்கப் பதக்கம் வென்றார் நான்சி



**ஜகார்த்தா : ஜன. 12,**

**பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான துப்பாக்கி சுடுதல் ஆசிய தகுதி சுற்று இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் நான்சி 252.8 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார்.**

மற்றொரு இந்திய வீராங்கனையான இளவேனில் வாலறிவன் 252.7 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் ருத்ராங்ஷ் பாட்டீல் 228.7 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

# டி20 உலக கோப்பையில் ரிஷப் பன்ட்டிற்கு இடம் : கவாஸ்கர் பேட்டி



**மும்பை : ஜன. 12,**

**இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர் அளித்துள்ள பேட்டி.**

"நான் கே.எல்.ராகுலை முழு நேர விக்கெட் கீப்பராக பார்க்கிறேன். அதற்கு முன் நான் ஒன்றை சொல்கிறேன், ரிஷப் பன்ட் ஒரு கால் குணமடைந்து இருந்தால் கூட, அவரை நேராக நான் தேர்வாளராக இருந்தால் அணிக்கு தேர்வு செய்வேன். காரணம் தனி ஆளாக அவரால் எந்த வடிவத்திலும் ஆட்டத்தை மாற்ற முடியும். எனவே அவரை உலககோப்பைக்கு தேர்வு செய்யவேண்டும்.

இருப்பினும் ரிஷப் பன்ட் கிடைக்கவில்லை என்றால் கே.எல்.ராகுலை விக்கெட் கீப்பராக வைத்தால் நன்றாக இருக்கும். அவரை முதலில் அணிக்கு தேர்வு செய்து, பின்பு துவக்க ஆட்டக்காரர் ஆகவோ மிடில் வரிசையிலோ அல்லது பினிஷர் ஆகவோ பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போது அவர் ஒரு ஆல் ரவுண்டராக இந்திய அணிக்கு தரமான விக்கெட் கீப்பராக கிடைத்திருக்கிறார். இன்னொரு பக்கத்தில் ஜிதேஷ் சர்மா பந்தை அடித்து விளையாட கூடியவராக இருக்கிறார். இப்படி வீரர்களுக்கிடையே நல்ல போட்டி இருப்பது நல்ல விஷயம், என தெரிவித்துள்ளார்.

# டி20 உலகக்கோப்பைக்கு முழுமையாக தயாராவதற்கான நேரம் எங்களுக்கு இல்லை – ராகுல் டிராவிட்



**புதுடெல்லி : ஜன. 12,**

**ஒருநாள் உலகக்கோப்பைக்கு பின் தற்போது எங்களுக்கு நிறைய டி20 போட்டிகள் இல்லை.**

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆட உள்ளது. அதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதலாவது ஆட்டம் நேற்று தொடங்கியது.

இந்த தொடருக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அதில் கேப்டனாக ரோகித் சர்மா தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் விராட் கோலி மீண்டும் டி20 அணியில் சேர்க்கப்பட்டுள்ளது ரசிகர்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது. ஏனெனில் நீண்ட காலம் கழித்து இருவரும் டி20 அணிக்கு திரும்பி உள்ளனர்.

வரும் ஜூன் மாதம் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடைபெற உள்ள டி20 உலகக்கோப்பைக்கு தயாராகும் பொருட்டு நடைபெறும் இந்த தொடரில் கேப்டன் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி ஆகியோர் மீண்டும் விளையாடுகின்றனர். அதை விட டி20 உலகக் கோப்பைக்கு முன்பாக இந்தியா விளையாடும் ஒரே ஒரு டி20 தொடர் இது என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்நிலையில் டி20 உலகக்கோப்பைக்கு முழுமையாக தயாராவதற்கான நேரம் தங்களுக்கு இல்லை என்று பயிற்சியாளர் ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், "கடந்த டி20 உலகக்கோப்பைக்கு பின் நாங்கள் ஒருநாள் உலகக்கோப்பைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தோம். ஆனால் 2023 ஒருநாள் உலகக்கோப்பைக்கு பின் தற்போது எங்களுக்கு நிறைய டி20 போட்டிகள் இல்லை. எனவே இந்த டி20 உலகக்கோப்பை சற்று வித்தியாசமாக இருக்கப் போகிறது. அதாவது இதற்கு தயாராவதற்கு போதுமான நேரம் எங்களிடம் இல்லை.

அதற்காக ஐபிஎல் தொடரை மட்டுமே சார்ந்திருக்கவேண்டியுள்ளது. எனவே நாங்கள் ஒன்றாக விளையாடுவதற்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கப்போவதில்லை. அதனால் வீரர்கள் சூழ்நிலைக்கேற்ப வளைந்து கொடுத்து தங்களை உட்படுத்திக்கொள்ள வேண்டும். கடந்த ஒருநாள் உலகக்கோப்பைக்கு தயாராக எங்களுக்கு நிறைய நேரம் இருந்தது.

சொல்லப்போனால் கடந்த டி20 உலகக்கோப்பைக்கு முன்பாகவும் எங்களுக்கு நிறைய போட்டிகள் இருந்தது. இருப்பினும் இம்முறை எங்களுக்கு அதிக போட்டிகள் கிடைக்கவில்லை. பும்ரா, சிராஜ் ஆகியோர் அடுத்ததாக நடைபெறும் இங்கிலாந்து டெஸ்ட் தொடரை கருத்தில் கொண்டு இத்தொடரில் விளையாடவில்லை" என்று கூறினார்.

# மலேசிய ஓபன் பாட்மிண்டன் சாட்விக் – ஷிராக் ஜோடி முன்னேற்றம்



**கோலாலம்பூர் : ஜன. 12,**

**மலேசிய ஓபன் பாட்மிண்டன் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஹெச்.எஸ். பிரனோய் முதல் சுற்றில் தோல்வி அடைந்தார். அதே வேளையில் இரட்டையர் பிரிவில் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி 2-வது சுற்றுக்கு முன்னேறியது.**

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 8-வது இடத்தில் உள்ள இந்தியாவின் ஹெச்.எஸ்.பிரனோய், டென்மார்க்கின் ஆண்டர்ஸ் அன்டன்சனுடன் மோதினார். 43 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹெச்.எஸ். பிரனோய் 14-21, 11-21 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்தார்.

ஆடவருக்கான இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 2-வது இடத்தில் உள்ள சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடியானது தங்களது முதல் சுற்றில் இந்தோனேஷியாவின் முகம்மது ஷோஹிபுல் ஃபிக்ரி, மவுலானா பாகஸ் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் சாட்விக்-ஷிராக் ஷெட்டி ஜோடி 21-18, 21-19 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்றது.

வரலாறு சினிமா

# "என் கணவர்தான் எனது மிகப்பெரிய பலம்"

## நயன்தாரா நெகிழ்ச்சி



**சேலம் : ஜன. 12,**

**ஒவ்வொரு ஆணுக்கு பின்னாலும் ஒரு பெண் இருப்பார் என்பார்கள். ஆனால் வெற்றிகரமாக இருக்கும் பெண்களுக்கும், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் பெண்களுக்கும் பின்னால் கண்டிப்பாக ஒரு ஆண் இருப்பார் என்று நடிகை நயன்தாரா தெரிவித்துள்ளார்.**

சேலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய நயன்தாரா கூறியதாவது: "எப்போதும் நம் காதில் விழக்கூடிய விஷயம், ஒவ்வொரு ஆணுக்கு பின்னாலும் ஒரு பெண் இருப்பார் என்பதுதான். ஆனால் மிக அரிதான ஒரு விஷயம் என்னவென்றால் மிகவும் வெற்றிகரமாக இருக்கும் பெண்களுக்கும், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் பெண்களுக்கும் பின்னால் கண்டிப்பாக ஒரு ஆண் இருப்பார்.

என்னுடைய வாழ்க்கையில் சினிமா தவிர நான் செய்யும் எல்லா விஷயங்களுக்கும் பின்னால் என் கணவர் இருக்கிறார். நான் அவரை சந்தித்த பிறகு நான் இன்னும் மிகப்பெரிய விஷயங்களை எல்லாம் செய்ய வேண்டும் என்றுதான் அவர் எனக்கு கற்று கொடுத்துள்ளார். என்றைக்குமே இதை ஏன் செய்கிறீர்கள்? அதை ஏன் செய்கிறீர்கள் என்று அவர் என்னிடம் கேட்டதில்லை. மாறாக இதை "ஏன் செய்யாமல் இருக்கிறீர்கள்?" "ஏன் இதோடு நிற்க வேண்டும்?" என்று தான் கேட்பார். எனக்கு மிகப்பெரிய பலமாக இருந்து வருகிறார்" என்று நயன்தாரா பேசினார்.

# அசுரன் ரீமேக்கில் நடிக்க சிவராஜ் குமார் விருப்பம்



**சென்னை : ஜன. 12,**

**திரைக்கு வந்த 'ஜெயிலர்' படத்தில் ரஜினிகாந்துடன் இணைந்து நடித்திருந்த கன்னட முன்னணி நடிகர் சிவராஜ் குமார், தற்போது தனுஷுடன் இணைந்து 'கேப்டன் மில்லர்' படத்தில் நடித்துள்ளார்.**

அவர் கூறுகையில், 'தனுஷை அவரது முதல் படத்தில் இருந்தே எனக்கு மிகவும் பிடிக்கும். அவரிடம் என்னை நான் பார்க்கிறேன். அவர் நடித்த பல படங்களை பலமுறை நான் பார்த்து ரசித்துள்ளேன். எனக்கு அவர் ஒரு பாடல் பாடியிருக்கிறார். அவர் அசைவம் சாப்பிட மாட்டார் என்பதால், படப்பிடிப்பு தளத்தில் அவருக்கு என் மனைவி சாம்பார் செய்து கொடுப்பார். தனுஷின் மகன்கள் யாத்ரா, லிங்கா இருவரும் வந்து கிரிக்கெட் விளையாடுவார்கள்.

இதற்கு முன்பு வெளியான 'ஜெயிலர்' படத்துக்காக எனக்கு அதிகமான அன்பும், ஆதரவும் கொடுத்ததற்காக ரசிகர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்து வெளியான 'அசுரன்' படத்தை கன்னடத்தில் ரீமேக் செய்து நடிக்க விரும்புகிறேன். இளம் வயது மற்றும் வயதான தோற்றத்தில் நடிப்பது மிகவும் சிரமம். அந்த வேடங்களில் தனுஷ் சிறப்பாக நடித்திருந்தார்' என்றார்.

# "நீங்கள் சொன்னால் இம்முறை விமானத்தின் மீது நடனம் ஆடுவேன்" ஷாருக்கான், மணிரத்னம் கலகலப்பான உரையாடல்



**மும்பை : ஜன. 12,**

**அண்மையில் நடந்த விழா ஒன்றில் நடிகர் ஷாருக்கான் மற்றும் இயக்குநர் மணிரத்னம் இடையேயான உரையாடல் குறித்த வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது.**

தனியார் நிகழ்ச்சி ஒன்றில் இருவரும் கலந்துகொண்டனர். அப்போது பாலிவுட் நடிகர் ஷாருக்கானிடம், "நீங்கள் இயக்குநர் மணிரத்னத்துடன் இணைந்து 20, 30 ஆண்டுகள் ஆகிவிட்டது. மீண்டும் இயக்குநர் மணிரத்னத்துடன் இணைந்து படம் நடிப்பீர்களா" என்று நெறியாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த நடிகர் ஷாருக்கான், "இப்போது எல்லாம் வெளியில் வந்துவிட்டது. என்னுடன் ஒரு படம் பண்ணுமாறு ஒவ்வொரு முறை உங்களை சந்திக்கும்போதும் கேட்கிறேன். கெஞ்சி கேட்கிறேன். நீங்கள் சரி என்று சொன்னால், இம்முறை 'தைய தைய' பாடலுக்கு விமானத்தின் மேல் ஏறி கூட ஆட தயாராக உள்ளேன்" என்று கூறினார்.

ஷாருக்கானின் இப்பேச்சுக்கு பதிலளித்த இயக்குநர் மணிரத்னம், "நீங்கள் விமானம் வாங்கும்போது நான் செய்து தருகிறேன்" என்றார். பதிலுக்கு, "மணி, என் சமீபத்திய படங்களின் வெற்றியை பார்க்கையில், விமானம் வாங்குவது வெகு தொலைவில் இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். விரைவில் வாங்குவேன்" என்று கலகலப்பாக பேசினார். இருவரின் இந்த உரையாடல் குறித்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# 'கங்குவா' எனக்கு ஸ்பெஷல் படப்பிடிப்பை நிறைவு செய்த சூர்யா பகிர்வு



**சென்னை : ஜன. 12,**

**'சிறுத்தை' சிவா இயக்கி வரும் 'கங்குவா' படத்தில் தனது காட்சிகளுக்கான படப்பிடிப்பு பணிகள் முழுமையாக நிறைவடைந்ததாக சூர்யா தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் கூறியுள்ளதாவது: 'கங்குவா' படத்தில் எனது கடைசி காட்சி எடுத்து முடிக்கப்பட்டது. ஒட்டுமொத்த யூனிட்டும் நேர்மறை எண்ணங்களால் நிறைந்திருந்தது. இது ஒன்றுக்கான முடிவு மற்றும் பலவற்றுக்கான தொடக்கமாக இருக்கிறது. இந்த நினைவுகள் அனைத்தையும் தந்த அன்புக்குரிய சிவா மற்றும் குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். 'கங்குவா' எனக்கு மிகப்பெரிய மற்றும் ஸ்பெஷலான படம். அதை நீங்கள் திரையில் காணவேண்டும் என்று நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்" என்று சூர்யா தெரிவித்துள்ளார்.

'சிறுத்தை' சிவா இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள படம், 'கங்குவா'. இதில் திஷா பதானி, யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, கோவை சரளா, ஆனந்த் ராஜ் உட்படப் பலர் நடிக்கின்றனர். பீரியட் படமான இதை ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் யுவி கிரியேஷன்ஸ் உடன் இணைந்து தயாரிக்கிறது. வெற்றி பழனிசாமி ஒளிப்பதிவு செய்கிறார். தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். 3டியில் உருவாகும் இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி உட்பட 10 மொழிகளில் வெளியாக இருக்கிறது. இப்படத்தின் டீசர் சில மாதங்களுக்கு முன்னால் வெளியாகி வரவேற்பை பெற்றது.

# சிவகார்த்திகேயன், குட்டீஸ்களுடன் செம ஆட்டம் போட்ட ஏ.ஆர்.ரஹ்மான்



**சென்னை : ஜன. 12,**

**'அயலான்' படத்தின் புரோமோஷனுக்காக நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் ரவிகுமார் மற்றும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இவர்கள் மூவரும் இணைந்து குழந்தைகளுடன் நடனம் ஆடும் புரோமோ வீடியோ ஒன்று வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.**

'நேற்று இன்று நாளை' படப்புகழ் ரவிகுமார் இயக்கியுள்ள திரைப்படம் 'அயலான்'. இந்தப் படத்தின் விஎஃப்எக்ஸ் காட்சிகளுக்காக பல வருடங்கள் இதன் வெளியீடு தள்ளிப் போனது. இறுதியாக கடந்த வருடம் தீபாவளி பண்டிகைக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டு மீண்டும் தள்ளிப் போனது. தற்போது இந்த பொங்கல் பண்டிகைக்கு வெளியாகிறது.

இந்தப் படத்தின் புரமோஷன் பணிகள் வேகமாக முடுக்கி விடப்பட்டுள்ளது. அந்த வகையில், 'அயலான்' படத்தின் புரமோஷனுக்காக நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் ரவிகுமார் மற்றும் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் ஆகிய மூவரும் இணைந்து குழந்தைகளுடன் நடனம் ஆடும் புரோமோ வீடியோ வெளியாகியுள்ளது.

இந்தப் பாடலை தனது மகன் அமீனுடன் இணைந்து ரஹ்மான் பாடியுள்ளார். வண்ணமயமான அரங்கத்தில், கலர்ஃபுல்லான உடைகளோடு குட்டீஸ்களுடன் இவர்கள் மூன்று பேரும் நடனம் ஆடியுள்ளனர். சமீபகாலமாக இதுபோன்ற புரோமோஷன் பாடல்களில் ரஹ்மான் ஆர்வம் காட்டுகிறார்.

சமீபத்தில் கூட, 'மாமன்னன்' படத்திலும் நடனம் ஆடினார். 'பத்துதல' படத்தில் 'ராவடி' பாடலை கேலி செய்யும் விதமாக ஜாலி வீடியோ ஒன்றை சினேகனோடு இணைந்து செய்தார். அந்த வகையில், 'அயலான்' படத்திற்காக ரஹ்மான் இதுபோன்று நடனம் ஆடியிருப்பதும் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# காதல் தோல்வி குறித்து லட்சுமி மேனன் உருக்கம்



**சென்னை : ஜன. 12,**

**தனது முதல் காதல் தோல்வி பற்றி உருக்கமாக கூறியுள்ளார் லட்சுமி மேனன்.**

என்னிடம் யாரும் காதலை வெளிப்படுத்தியது கிடையாது. ஆனால், நான் காதலை வெளிப்படுத்தி இருக்கிறேன். பள்ளியில் படிக்கும்போது ஒருவரை எனக்கு பிடித்திருந்தது. அவரிடம் நேராக போய் லவ் சொல்லிட்டேன். சில நாட்கள் கழித்து அவரும் ஒப்புக் கொண்டார். அதன் பிறகு இருவரும் அடிக்கடி பேசிக் கொள்வது, அடிக்கடி அவுட்டிங் சென்றது இதுபோல எதுவும் நடக்கவில்லை. அவர் அவருடைய படிப்பில் கவனமாக இருந்தார். நான் என்னுடைய படிப்பில் கவனமாக இருந்தேன். நண்பர்கள் போலவே இருந்தோம். எப்போதாவது ஒருமுறைதான் பேசிக் கொள்வோம்.

பள்ளி காலம் முடியும் தருவாயில் தான் அடிக்கடி பேச தொடங்கினோம். தொலைபேசியில் பேச தொடங்கினோம். போர்வையை போர்த்திக்கொண்டு அவருடன் நான் ரகசியமாக பேசுவேன். வீட்டில் யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக வீட்டை சுற்றி சுற்றி வந்து தொலைபேசியில் பேசி இருக்கிறேன். ஆனால், பள்ளி முடிந்த பிறகு அந்த காதல் காணாமல் போய்விட்டது. நான் என்னுடைய துறையில் பிஸியாகிவிட்டேன். அவர் அவருடைய துறையில் பிஸியாகிவிட்டார். அவர் திருமணமும் செய்துவிட்டார்.

# நயன்தாராவின் 'அன்னபூரணி' படம் நெட்ஃப்ளிக்ஸிலிருந்து நீக்கம் – மன்னிப்புக் கோரியது தயாரிப்பு நிறுவனம்



**சென்னை : ஜன. 12,**

**நிலேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் நயன்தாரா நடித்துள்ள 'அன்னபூரணி' திரைப்படம் நெட்ஃப்ளிக்ஸ் தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் மத உணர்வுகளை புண்படுத்தும் வசனங்கள் இடம்பெற்றது தொடர்பாக படத்தின் தயாரிப்பு நிறுவனம் இந்து அமைப்புகளிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.**

நடிகை நயன்தாராவின் 75-வது திரைப்படம், 'அன்னபூரணி'. ஜெய், சத்யராஜ், கே.எஸ். ரவிக்குமார், கார்த்திக் குமார், ரெடின் கிங்ஸ்லி உட்பட பலர் நடித்த இந்தப் படம் கடந்த டிச. 1-ம் தேதி வெளியானது. அறிமுக இயக்குநர் நிலேஷ் கிருஷ்ணா இயக்கி இருந்தார். இந்தப் படம் சமீபத்தில் நெட்பிளிக்ஸ் தளத்திலும் வெளியானது.

இந்த படத்தில், இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த ஃபர்ஜான் என்ற கதாபாத்திரம், கதாநாயகியை இறைச்சி சாப்பிட வைப்பதற்காக ராமர் இறைச்சி சாப்பிடுவார் என்று கூறுவது போலவும் அர்ச்சகர் மகளான கதாநாயகி 'நமாஸ்' செய்வது போலவும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்து மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் இந்தப் படம் வேண்டும் என்றே எடுக்கப்பட்டுள்ளது என்று மும்பையை சேர்ந்த, சிவசேனா முன்னாள் தலைவர் ரமேஷ் சோலங்கி என்பவர் மும்பை எல்டி மார்க் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். இதையடுத்து போலீஸார் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்துள்ளனர்.

இதனையடுத்து இப்படத்துக்கு எதிராக சமூக வலைதளங்களில் இந்து அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. பலரும் இப்படத்தை தடை செய்யவேண்டும் என்று பதிவிட்டு வந்தனர்.

இந்த நிலையில், தற்போது இந்த படம் நெட்ஃப்ளிக்ஸ் தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் மத உணர்வுகளை புண்படுத்தும் வசனங்கள் இடம்பெற்றது தொடர்பாக படத்தை இணைந்து தயாரித்த ஜீ நிறுவனம் விஷ்வ இந்து பரிஷர் அமைப்பிடம் மன்னிப்புக் கோரியுள்ளது. அக்கடிதத்தில் 'படத்தில் சம்மந்தப்பட்ட காட்சியை நீக்கும் வரை அப்படத்தை நெட்ஃப்ளிக்ஸிலிருந்து நீக்குவதாக உறுதியளிக்கிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



வரலாறு உலகம்

# சமூக ஊடக வதந்தியால் மூண்ட கலவரம்

## பப்புவா நியூ கினியா நாட்டில் 15 பேர் பலி



**மோர்ஸ்பி : ஜன. 12,**

**பப்புவா நியூ கினியா நாட்டில் அரசு ஊழியர்கள், காவலர்கள் உள்ளிட்டோருக்கு சம்பளக்குறைப்பு செய்யப்போவதாக சமூக ஊடகங்களில் செய்தி வெளியானது. இதையடுத்து போலீஸார் மற்றும் அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து கலவரம் வெடித்தது. இதில் 15 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

ஆஸ்திரேலிய கண்டத்தில் அமைந்துள்ள பப்புவா நியூ கினியா நாட்டில், அரசு ஊழியர்கள், காவலர்கள் உள்ளிட்டோருக்கு சம்பளக்குறைப்பு செய்யப்போவதாக சமூக ஊடகங்களில் செய்தி வெளியானது. இதையடுத்து போலீஸார் மற்றும் அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட அப்பகுதி மக்கள் அங்கிருந்த கடைகளை சூறையாடினார்கள். அதோடு சில பொருட்களையும் திருடிச்சென்றனர். இதையடுத்து கலவரம் வன்முறையாக மாறியது. அதைத் தொடர்ந்து, அரசாங்கம் சார்பில் இது குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டது. சம்பளக்குறைப்பு குறித்து தவறான செய்தி வெளியானதாகவும் விளக்கம் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில், தலைநகர் போர்ட் மோர்ஸ்பியில் உள்ள கடைகள் மற்றும் பிற கட்டிடங்கள் தீவைக்கப்பட்டன. மேலும் கடைகளில் உள்ள பொருட்களை மக்கள் கொள்ளையடித்துச் சென்றனர். இந்த வன்முறைக் கலவரத்தின் போது குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டனர். தலைநகர் போர்ட் மோர்ஸ்பியில் நடந்த கலவரத்தில் 8 பேர் உயிரிழந்ததாகவும், லே நகரில் 7 பேர் உயிரிழந்ததாகவும் பப்புவா நியூ கினியா காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் பிரதமர் ஜேம்ஸ் மாரப் இது குறித்து, "பொதுமக்கள், சொத்துக்களைக் கொள்ளையடிப்பதையும், சேதப்படுத்துவதையும் நிறுத்து வேண்டும். ஒரு நாட்டில் இது மாதிரியான விசயம் நடப்பதை அனுமதிக்க முடியாது. நட்டத்தை சந்தித்த வணிகங்களுக்கு அரசாங்கம் சார்பில் நிவாரணம் வழங்க வழிவகை செய்யப்படும்" என்றார்.

பப்புவாநியூகினியா அதிக மக்கள்தொகை கொண்ட பசிபிக் தீவு நாடாகும். அதிகளவில் கனிம வளங்கள் மற்றும் பிற வளங்களைக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா – இங்கிலாந்து வர்த்தக கொள்கையில் விரைவில் முக்கிய முடிவு : ரிஷி சுனக் நம்பிக்கை



**புதுடெல்லி : ஜன. 12,**

**இந்தியா - இங்கிலாந்து இடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விரைவில் முடிவு எட்டப்படும் என்று இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அரசு முறை பயணமாக இங்கிலாந்து சென்றுள்ளார். இந்தப் பயணத்தின் போது அவர் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கை பிரதமரின் இல்லத்தில் சந்தித்தார். அப்போது இந்தியா - இங்கிலாந்து இடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விரைவில் முடிவு எட்டப்படும் என்று இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இங்கிலாந்து - இந்தியா நாடுகள் வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பத் துறைகளில் இணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உடன் சேர்ந்து இங்கிலாந்து பிரதமரும் விவாதித்தார். குறிப்பாக இங்கிலாந்து - இந்தியா இடையே தற்போது நடந்து வரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையில் விரைவில் வெற்றிகரமாக முடிவு எட்டப்படும் என்று இங்கிலாந்து பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் இந்தியாவின் வர்த்தக நிறுவனங்களுடன் வணிகம் மற்றும் தொழில்நுட்ப உறவுகளை வலுப்படுத்துவதுவதற்கான அரசின் ஆதரவு உட்பட பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அரண்களை உறுதிப்படுத்துவதற்கான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து தான் மற்றும் தனது அரசின் ஆர்வத்தை ரிஷி சுனக் வெளிப்படுத்தினார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை 2022 ஆம் ஆண்டு தொடங்கியது. இந்த ஒப்பந்தத்தின் 13-வது சுற்று பேச்சுவார்த்தை டிசம்பர் மாதம் முடிவுக்கு வந்தது. அப்போது இரண்டு தரப்பில் உள்ள சிக்கல்களை சரி செய்து ஒப்பந்தத்தை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல முடிவெடுக்கப்பட்டது.

ரிஷி சுனக்குடனான சந்திப்பு குறித்து மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்குடன் ஓர் அன்பான சந்திப்பு. அவருடன் பரந்த அளவிலான பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பு கிடைத்தது. நாங்கள் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிரச்சினைகள், அமைதியான உலகளாவிய நிலையான விதிகளுக்குட்பட்டு எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுவது என்பது குறித்தும் விவாதித்தோம்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது ராஜ்நாத் சிங், இங்கிலாந்து பிரதமருக்கு ராம் தர்பார் சிலையை பரிசாக வழங்கினார். அப்போது போது இங்கிலாந்து பாதுகாப்புத்துறை ஆலோசகர் டிம் பாரோவ் உடன் இருந்தார். முன்னதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மூன்று நாள் பயணமாக இங்கிலாந்து சென்றிருக்கிறார். கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஒருவர் இங்கிலாந்து செல்வது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக இங்கிலாந்து வெளியுறவு செயலாளர் டேவிட் கேமரூனுடன் ராஜ்நாத் சிங் பேச்சுவார்த்தை நடத்தினார். இதுகுறித்து இங்கிலாந்து - இந்தியா உறவு மற்றும் ஒத்துழைப்பை ஆழமாக்குவது குறித்து பேச்சுவாத்தை நடத்தினோம் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

# மாடுகளுக்கு பீர் ஊற்றி வளர்க்கும் மார்க் இறைச்சி விற்பனையில் இறங்குகிறார்



**ஹவாய் தீவு : ஜன. 12,**

**உலகிலேயே மிகவும் சுவையான தரமான மாட்டிறைச்சியை விற்பனைக்கு கொண்டு வர உள்ளதாக மெட்டா மற்றும் பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுக்கர்பர்க் தெரிவித்துள்ளார்.**

உலகின் முன்னணி சமூக ஊடகங்களான வாட்ஸ் அப், பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் தாய் நிறுவனமாக மெட்டா விளங்குகிறது. இந்த நிறுவனத்தின் தலைவராகவும், நிறுவனராகவும் உள்ளவர் மார்க் ஜுக்கர்பர்க். உலகின் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் 16வது இடத்தில் இருப்பதோடு, பிரபலமானவர்கள் பட்டியலிலும் இடம்பிடித்துள்ளவர். இவர் மெட்டா நிறுவனத்தின் மூலம் மென்பொருள், அது சார்ந்த கருவிகள் மட்டுமின்றி, மருத்துவம் உட்படப் பல ஆராய்ச்சிகளிலும் முதலீடுகளைச் செய்து வருகிறார்.

இந்நிலையில், தற்போது அவர் தனது கவனத்தை இறைச்சி தயாரிப்பின் பக்கம் திருப்பியுள்ளார். உலக அளவில் இறைச்சி ஏற்றுமதிக்கான சந்தை மிகப்பெரியது. அதிலும் மாட்டிறைச்சி விற்பனை உலக அளவில் பிரபலமானது. இதில் பல்வேறு கால்நடை வளர்ப்பு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், மாட்டிறைச்சி உற்பத்தியில் கால்பதிக்க உள்ளதாக மார்க் சமீபத்தில் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக, அவர் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், உலகின் சிறந்த மாட்டிறைச்சியை உருவாக்குவதற்காக முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஹவாய் தீவில் உள்ள தனது பண்ணையில், வேக்யூ - ஆங்கஸ் என்ற இரண்டு மாட்டு ரகங்களை வளர்த்து வருவதாகக் கூறியுள்ளார். அவற்றிற்கு உலகின் விலை உயர்ந்த மக்காடாமிய கொட்டைகள் உணவாக வழங்கப்படுவதாகவும், மாடுகள் அருந்த உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பீர் ஆகியவற்றைக் கொடுத்து பராமரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். அவை ஆண்டு ஒன்றுக்கு 2 ஆயிரம் முதல் 5 ஆயிரம் கிலோ உணவு சாப்பிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்காகப் பல நூறு ஏக்கர் மக்காடமியா மரங்களை நட்டு வளர்த்து வருவதாகவும் மார்க் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய எல்லா செயல்களைக் காட்டிலும், இது சுவையானது என்று குறிப்பிட்டு மாட்டிறைச்சி சாப்பிடும் புகைப்படத்தையும் மார்க் பதிவிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

# கொரோனா பரவல் உச்சம் : மருத்துவமனைகளில் முகக்கவசத்தை கட்டாயமாக்கியது ஸ்பெயின் அரசு



**மாட்ரிட் : ஜன. 12,**

**கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதால் ஸ்பெயின் நாட்டில் உள்ள மருத்துவமனைகள், மருந்தகங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாடு அங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் அமலுக்கு வந்துள்ளது.**

ஸ்பெயின் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொரோனா தொற்று கடந்த சில நாட்களாக மிக வேகமாக பரவி வருகிறது. அத்துடன் காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் உள்ளிட்ட பிரச்சினைகளுடன் வரும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதனால் பாதிப்பு அதிகமுள்ள பகுதிகளில் முகக்கவசம் அணிய மக்களை வலியுறுத்துமாறு அந்த பகுதிகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஸ்பெயின் சுகாதாரத்துறை அறிவுறுத்தியது. ஆனால் பொதுமக்கள் அதனை சரிவர பின்பற்றாத நிலையில், தொடர்ந்து நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு தற்போது நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகள், சுகாதார நிலையங்கள், கிளினிக்குகள், மருந்தகங்களில் முகக்கவசம் கட்டாயமாக அணிய வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஸ்பெய்ன் அரசு கொண்டு வந்துள்ளது. இந்த கட்டுப்பாடு நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் அமலுக்கு வந்தது. மேலும் கொரோனா பாதிப்பு தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு குறைவாக இருந்தால் அந்தந்த பகுதிகளில் கட்டுப்பாட்டை தளர்த்திக் கொள்ளவும் ஸ்பெயின் அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஸ்பெயின் சுகாதாரத் துறை அமைச்சர் மோனிகா கார்ஸியா, "தொற்று பரவலை குறைத்து பாதிப்புக்குள்ளாகும் மக்களை காப்பாற்ற வேண்டும். முகக்கவசம் அணிவதில் எந்த கஷ்டமும் இல்லை. அது ஒரு அடிப்படையான, எளிமையான ஒரு நடவடிக்கை" என்று தெரிவித்தார்.

# "இந்தியாவுடன் சுமூக உறவு வேண்டும்"

## மாலத்தீவு அரசுக்கு எதிர்க்கட்சி தலைவர் கண்டனம்



**புதுடெல்லி : ஜன. 12,**

**மாலத்தீவு எதிர்க்கட்சி தலைவரும், மாலத்தீவு ஜனநாயகக் கட்சியின் தலைவருமான ஃபயாஸ் இஸ்மாயில் நேற்று முந்தினம் புதன்கிழமை கூறியுள்ளதாவது:**

இந்தியாவுக்கும், பிரதமர் மோடிக்கும் எதிரான இனவெறி பேச்சு என்பது துரதிருஷ்டவசமாக அரசாங்கத்தின் பதவிகளில் உள்ளவர்களின் தனிப்பட்ட கருத்துகள். சமூக ஊடகங்கள் எங்கும் பரவியுள்ளன. இதுபோன்ற பேச்சுகள் இருநாடுகளுக்கிடையில் எளிதில் முரண்பாட்டை ஏற்படுத்தி விடுகின்றன.

இந்தியாவுடனான பிரச்சினைகளை தீர்க்கவும், உறவை சுமூகமான முறையில் பேணவும் கடுமையான நிலைப்பாட்டை மாலத்தீவு அரசு எடுக்க வேண்டும். இந்த விவகாரத்தில் அரசு தரப்பில் எந்த உள்நோக்கமும் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும்.

இந்தியா-மாலத்தீவு இடையிலான உறவு பல ஆண்டுகளாக பல்வேறு முதுபெரும் தலைவர்களால் பேணி வளர்க்கப்பட்டது. இந்த உறவை ஒன்றிரண்டு சமூகவலைதள செய்திகள் சீர்குலைக்கும் என்பது வருத்தமளிக்க கூடியது. இருநாட்டு உறவு அரசுகளுக்கு அப்பாற்பட்டது. இருநாடுகளிலும் அரசுகள் மாறும்போது கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது என்பது இயல்பான நிகழ்வு.

ஆனால், தற்போது இந்தியாவுக்கும், மாலத்தீவுக்கும் இடையே நிலவி வரும் சலசலப்பு மக்களை சென்றடைந்துள்ளதால் அதனை எப்படி சரி செய்வது என்பதில்தான் எனது முழு அக்கறையும் உள்ளது. இந்த விவகாரத்தைப் பொருத்தவரையில் இரு தரப்பிலும் பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டியது அவசியம் என்று ஃபயஸ் இஸ்மாயில் தெரிவித்தார்.

# புறப்பட தயாராக இருந்த விமானத்தில் இருந்து கீழே குதித்த பயணியால் பரபரப்பு



**கனடா : ஜன. 12,**

**கனடாவின் டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் துபாய்க்கு புறப்பட ஏர் கனடா விமானம் தயாராக இருந்தது.**

பயணிகள் அனைவரும் தங்களது இருக்கையில் அமர்ந்தனர். அப்போது ஆண் பயணி ஒருவர் தனது இருக்கையில் அமராமல் நின்று கொண்டிருந்தார். திடீரென்று அவர் விமானத்தின் கேபின் கதவை திறந்து கீழே குதித்தார். இந்த வாலிபர் சுமார் 20 அடி உயரத்தில் இருந்து குதித்ததில் காயமடைந்தார்.

போலீசார் மற்றும் மீட்புக்குழுவினர் விரைந்து வந்து வாலிபரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அவர் விமானத்தில் இருந்து எதற்காக கீழே குதித்தார்? என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. அந்த வாலிபரின் பெயர், மற்ற விவரங்களை வெளியிடாத போலீசார், அவர் கைது செய்யப்பட்டாரா என்பது குறித்தும் தெரிவிக்கவில்லை. இதனால் துபாய்க்குச் செல்லும் விமானம் 6 மணி நேரம் தாமதமாக புறப்பட்டுச் சென்றது.

# உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் பட்டியல் முதலிடத்தில் 6 நாடுகள் இந்தியாவிற்கு எந்த இடம்



**புதுடெல்லி : ஜன. 12,**

**2024-ம் ஆண்டுக்கான உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலான 'ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ்' வெளியிட்டுள்ளது. இதன்படி பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகளும், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய ஆசிய நாடுகளும் முதலிடம் பிடித்துள்ளன.**

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் தொடர்ந்து முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டு வருகிறது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தான், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் முறையே 101, 102, 103, 104 ஆகிய இடங்களைப் பிடித்து பட்டியலில் பின் தங்கியுள்ளன. இந்தியாவின் பிற அண்டை நாடுகளான மாலத்தீவு 58-வது இடத்தையும், சீனா 62-வது இடத்தையும், பூடான் 87-வது இடத்தையும், மியான்மர் 92-வது இடத்தையும், இலங்கை 96-வது இடத்தையும், வங்கதேசம் 97-வது இடத்தையும், நேபாளம் 98-வது இடத்தையும் பெற்றுள்ளன.

இந்தத் தரவரிசைப் பட்டியலில் இந்தியா தனது முந்தைய இடமான 80-வது இடத்தை இந்த ஆண்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்திய பாஸ்போர்ட் மூலமாக 62 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸால் வெளியிடப்பட்டிருக்கும் 2024-ம் ஆண்டுக்கான சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசை ஒரு குறிப்பிட்ட நாட்டின் பாஸ்போர்ட் மூலம் எத்தனை நாடுகள் அல்லது இடங்களுக்கு விசா இல்லாமல் பயணம் செய்ய முடியும் என்ற அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ள நாடுகளின் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் 194 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள ஆப்கானிஸ்தான் நாட்டு பாஸ்போர்ட் மூலமாக 28 நாடுகளுக்கு மட்டுமே விசா இல்லாமல் பயணிக்க முடியும். இவை அனைத்தும் சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் (IATA) தரவுகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் பின்லாந்து, ஸ்வீடன் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன. ஆஸ்திரேலியா, டென்மார்க், நெதர்லாந்து ஆகிய நாடுகள் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன. அமெரிக்க பாஸ்போர்ட்டானது கனடா மற்றும் ஹங்கேரி நாட்டு பாஸ்போர்ட்களுடன் 7-வது இடத்தை பகிர்ந்து கொள்கிறது. இங்கிலாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளுடன் 4-வது இடத்தை பிடித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் ஐக்கிய அரபு அமீரகம் 11-வது இடத்தை பிடித்துள்ளது. இஸ்ரேல் 21-வது இடத்தில் உள்ளது. இதனிடையே ரஷ்யா 51-வது இடத்தில் உள்ளது.

சர்வதேச குடியுரிமை மற்றும் குடியிருப்பு குறித்த ஆலோசனைகள் வழங்கும் நிறுவனமான ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸ் என்ற லண்டனை அடிப்படையாக கொண்டு இயங்கும் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸை வெளியிட்டு வருகிறது. இது உலகின் அனைத்து பாஸ்போர்ட்களின் அசல் தரவரிசை என்று கூறப்படுகிறது. இது, உலகின் 227 இடங்களையும், 199 நாடுகளின் பாஸ்போர்ட்களையும் உள்ளடக்கியுள்ளது.

# மும்பை தாக்குதல் முக்கிய குற்றவாளி ஹபீஸ் சயீத் பாக். சிறையில் இருக்கிறார் : ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தகவல்



**நியூயார்க் : ஜன. 12,**

**லஷ்கர் - இ - தொய்பா தீவிரவாத அமைப்பின் நிறுவனர் ஹபீஸ் சயீத். தீவிரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி செய்த குற்றத்துக்காக இவருக்கு 11 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.**

மேலும், 2008-ம் ஆண்டில் நடந்த மும்பை தீவிரவாத தாக்குதலில் 161 பேர் உயிரிழந்த சம்பவத்தில் இவர் முக்கிய குற்றவாளியாக இந்தியாவில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். இவரை அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபை சர்வதேச தீவிரவாதி என அறிவித்தன. அவரை நாடுகடத்துமாறு பாகிஸ்தான் அரசிடம் இந்தியா தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது.

இந்நிலையில், ஐக்கியநாடுகள் பாதுகாப்பு கவுன்சிலின் (யுஎன்எஸ்சி) திருத்தப்பட்ட பட்டியலின்படி, பிப்ரவரி 12, 2020 முதல் பாகிஸ்தான் அதிகாரிகளின் காவலில் ஹபீஸ் சயீத் உள்ளார்.

ஏழு தீவிரவாத செயல்களுக்கு நிதியுதவி செய்த குற்றங்களில் அவருக்கு 78 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அவர் தற்போது சிறை தண்டனையை அனுபவித்து வருகிறார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா சபை மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றால் ஹபீஸ் சயீத் சர்வதேச தீவிரவாதி என்று அறிவிக்கப்பட்டபோதிலும், சயீத் பாகிஸ்தானிலிருந்து, இதுவரைவேறுஎந்தநாட்டுக்கும் நாடுகடத்தப்படவில்லை. 20 ஆண்டுகளாக அவர் பாகிஸ்தானிலேயே சுதந்திரமாக உலவி வந்துள்ளார்.

# சீன தாக்குதல் அச்சுறுத்தல் எதிர் கொள்ள தயாராகும் மக்கள்



**தைவான் : ஜன. 12,**

**செமிகண்டக்டர் தயாரிப்பில் முன்னணியில் உள்ள நாடு, தைவான். வடகிழக்கு பசிபிக் கடலில் உள்ள தீவுநாடான தைவான், தன்னை சுயாட்சி பெற்ற தனி நாடாக அறிவித்து கொண்டாலும், அதை ஏற்க மறுக்கும் சீனா, அந்நாட்டை தனது முழு ஆளுகைக்கு உட்பட்ட நாடாக பிரகடனம் செய்து அதன் நிலப்பரப்பு மற்றும் வான்வெளி பகுதிகளில் ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.**

ஆனால், தைவானின் சுயாட்சி உரிமைக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது. சீனாவுடன் இது குறித்து அமெரிக்காவில் சில தினங்களுக்கு முன் நடந்த ராணுவ உயர் அதிகாரிகளின் பேச்சு வார்த்தையின் போது, "தைவான் விஷயத்தில் சமரசமே இல்லை" என திட்டவட்டமாக சீனா தெரிவித்தது. இதையடுத்து எப்போது வேண்டுமானாலும், சீனா தைவானை ஆக்ரமிக்கலாம் எனும் அச்சம் தைவான் நாட்டில் தோன்றியுள்ளது.

இதை தொடர்ந்து பல மக்கள் தங்கள் வெளியுலக தொடர்புகளை குறைத்து கொண்டுள்ளனர். அலுவலகம் செல்ல தயக்கம் காட்டி பலர், வீட்டிலிருந்தே பணிபுரிய தொடங்கி உள்ளனர். இணையவழி செயல்பாடுகள் குறைந்துள்ளதால், வங்கி சேவைகள் முடங்கி விட்டது. ராணுவ தாக்குதல் மட்டுமின்றி இணைய வழியாகவும் சீனாவால் தாக்கப்படும் சாத்தியம் அதிகம் இருப்பதாக தைவான் அஞ்சுகிறது. இதனால் தைவானின் ராணுவ கட்டமைப்புகளில் மென்பொருள் பாதுகாப்பை அந்நாடு வலுப்படுத்தி கண்காணித்து வருகிறது.

தினந்தோறும் 5 மில்லியன் சைபர் தாக்குதல்கள் சீனாவினால் தைவான் நாட்டின் தொலைத்தொடர்பு, எரிசக்தி மற்றும் நிதித்துறை கட்டமைப்புகள் மீது நடத்தப்படுவதாக தைவான் அரசு தெரிவித்தது. சீனாவிற்கு வெளியிலிருந்து இயங்கும் சீன சைபர் தாக்குதல் குழுவான "ஃப்ளாக்ஸ் டைஃபூன்" தைவான் நிறுவனங்களின் மென்பொருள் கட்டமைப்பை இணையவழியாக ஆக்ரமிக்க முயல்வதாக கடந்த வருடமே, மைக்ரோசாப்ட், எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - இங்கிலாந்து வர்த்தக கொள்கையில் விரைவில் முக்கிய முடிவு : ரிஷி சுனக் நம்பிக்கை





# கொரோனா பரவல் உச்சம் : மருத்துவமனைகளில் முகக்கவசத்தை கட்டாயமாக்கியது ஸ்பெயின் அரசு

# தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று முதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கம்




சென்னை / புதுக்கோட்டை | 12.01.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

12.01.2024 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

விவேகானந்தர் , இந்திய மெய்யியலாளர், ஆன்மிகவாதி (பி.1863) (இ.1902)



பக்வான் தாஸ் , இந்திய மெய்யியலாளர், அரசியல்வாதி (பி.1869) (இ.1958)



எல்லப்பிரகத சுப்பாராவ் , இந்திய உயிரிவேதியியலாளர் (பி.1895) (இ.1948)



மகேஷ் யோகி , இந்திய-இடச்சு மதகுரு (பி.1918) (இ.2008)



## இன்றைய நினைவு நாள்

இரா. நெடுஞ்செழியன் , தமிழக அரசியல்வாதி (பி.1920) (இ.2000)



முருகு சுந்தரம் , தமிழகக் கவிஞர் (பி.1929) (இ.2007)



அன்புமணி , ஈழத்து எழுத்தாளர் (பி.1935) (இ.2014)



## தேசிய இளைஞர் நாள் (இந்தியா)